விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாவதாக தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்படுவது
RAMCO CEMENT
சீமெந்து

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | வைகாசி 15 | திங்கட்கிழமை | (30.05.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 162

## ஹண்டர்-ஹயஸ் வான் விபத்தில் நால்வர் பலி ,அறுவர் படுகாயம்

### நீர்கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

நீர்கொழுமபு கட்டுவப் பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.மேலும் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கி வந்துகொண்டிருந்த ஹண்டர் ரகவாகனமும் ராஜாங்கனையில் இருந்து கொழும்பு நேரக்கிச் சென்று கொண்டிருந்த ஹயஸ் வான் ஒன்றும் நேருக்குநேர் மோதிக் கொண்டதிலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

பத்துரமுல்லையில் மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காக கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வானே ஹண்டருடன் மோதியது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசியவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் பயணத்திற்கு ஹெலி வழங்க விமானப்படை மறுப்பு

(கிளிநொச்சி)

திருகோணமலை மாவட்ட தளபதி கேணல் சொர்ணம் கிளிநொச்சியில் இருந்து திருகோணமலை செல்வதற்கு இலங்கை விமானப் படை ஹெலி வழங்க மறுத்துள்ளது.

தலைமைத்துவத்துடன் திருமலை கள நிலைபரம் தொடர்பாக பேசுவதற்கு கடந்த மே 2ம் திகதி கேணல் சொர்ணம் தலைமையிலான விடுதலைப்புலிகளின் குழுவினர் திருகோணமலையில் இருந்து ஹெலி மூலம் கிளிநொச்சி சென்றிருந்தனர்.

பேச்சுக்களை முடித்துக் கொண்டு ஹெலி மூலம் திருமலை திரும்புவதற்கு சமாதான செயலகம் ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளது.

இதேவேளை கேணல் சொர்ணத்துடன கிளிநொச்சி வந்த மட்டக்களப்பு மாவட்ட தளபதி பானு மட்டக்களப்பு கரடியனாறுக்கு செல்வதற்கு ஹெலி வழங்குவது குறித்தும் அரசு இதுவரை பதிலளிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தளபதிகளுக்கான ஹெலி தேவை குறித்து கடந்த 2ஆம் திகதி விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் ஊடாக அரச சமாதான செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சியில் இருந்து தரைவழியாக விடுதலைப் புலிகளின் போராளிகளின் ஒரு தொகுதியினர் மட்டக்களப்பிற்குச் செல்வதற்கு கண்காணிப்புக் குழு ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் அரசு இதுவரை பதிலளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.(ச)

# பொதுக்கட்டமைப்பு குறித்து விளக்கமளிக்க

# வியாழனன்று ஜனாதிபதி இந்தியா பயணம்

### நாடு திரும்பியதும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்து?

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு இறுதி வடிவம் பெற்றுள்ள நிலையில் அது குறித்து இந்திய அரசியல் தலைவர்களுக்கு விளக்குவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் வியாழக்கிழமை இந்தியா செல்லவுள்ளார்.அங்கிருந்து நாடு திரும்பியதும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கு நோர்வே அரசின் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு அழைப்புவிடுவார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ( 12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் யுனிசெப் பிரதிநிதி நேற்று சந்திப்பு

(கிளிநொச்சி)



தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ரெட்சைபன் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் இச்சந்திப்பு நடை பெற்றது. தமிழீழ அரசியல

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் ஒரு பகுதியினர் பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்கட்டுமானங்களை செயற்படுத்துவதற்கான உத்தேச பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் வல்லமை அரசாங்கத்திடம் இருப்பதாக பொதுஜன எடுத்து நாட்டை குழப்பிவந்த ஜே.வி.பியை சுதந்திரக்கட்சி மாற்றியுள்ளது.

பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி சந்திரிகா செயற்படுத்தினாலும் அரசில் இருந்துவெளியேறுவதில்லை என ஜே.வி.பி.தற்போது முடிபுஎடுத்துள்ளதாக ஜே.வி.பி த்தாலும் அக்கட்சியினரின் ஒரு பகுதியினர் பொதுக்கட்டமைப்பை ஆதரித்து உற்சாகமூட்டுவதாக ஜெயரட்ண தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பை ஆதரிக்குமாறு ஜே.வி.பியிடம் நாம் கெஞ்சிக்கொண்டு இருக்கமாட்டோம் இருதரப்பினரும் புரிந்துணர்வு ஒப்

## அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலரை லக்ஸ்மன் கதிர்காமர் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ஜொன்டலீசா றைசைலை ... தால் நடாத்தப்படும் 14வது உலக விவகார மாநாட்டில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டுள்ள லக்ஷ்

(கொழும்பு)

அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் கொண்டலீசா றைசைலை வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்இவ்வாரம் சந்திக்கவுள்ளார். அமெரிக்காவில் அட்லான்டா-ஜோர்ஜியாவில் மூன்று நாட்கள் இடம் பெறவுள்ள சி.என்.என். நிறுவனத்தால் நடாத்தப்படும் 14வது உலக விவகார மாநாட்டில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவின் பாதுகாப்பு விடயத்தில் மிகப்பலம் வாய்ந்த பதவியாகக் கருதப்படும் பிரதி இராஜாங்கச் செயலாளரான கொண்ட(12ஆம் பக்கம் பார்க்க)

களை செயற்படுத்துவதற்கான உத்தேச பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் வல்லமை அரசாங்கத்திடம் இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி. எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான முரண்பாடான நிலையை

பதி சந்திரிகா செயற்படுத்தினாலும் அரசில் இருந்துவெளியேறுவதில்லை என ஜே.வி.பி.தற்போது முடிபுஎடுத்துள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக்கட்சியின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

ஜே.வி.பி.ஆதரித்தாலும் எதிர்

பொதுக்கட்டமைப்பை ஆதரிக்குமாறு ஜே.வி.பியிடம் நாம் கெஞ்சிக்கொண்டு இருக்கமாட்டோம் இருதரப்பினரும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு இருக்கிறோம் தற்போதைய சூழலைக்கருத்திற்கொண்டு மக்களுக்கான பொதுக்கட்டமைப்பை உரு

(12ஆம் பக்கம் பார்க்க)

# மின்னல் தாக்கி சிறுவன் மரணம்

(கொழும்புத்துறை)

மின்னல் தாக்கி 8வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று பிற்பகல் இடியுடன் கூடிய மழைபெய்து கொண்டிருந்தசமயம் வீட்டு வளவில விளையாடிக்கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட சென்யோன்ஸ் கல்லூரியில் தரம்

(12ஆம் பக்கம் பார்க்க)



# கைக்குண்டு வெடித்து இளைஞன் ஸ்தலத்தில் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச்சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் அவ்விடத்தில் பலியானார்.

மேலும் பாடசாலை மாணவர் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர் அப்துல்காதர் ஜவ்பர் உசேன் (வயது 22) என

(12ஆம் .பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் வான் படையால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அபாயத்திலா

## சொல்லவில்லை என்கிறது க.கா.குழு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படையால் போர்ஏற்படும் அபாயம் இருப்பதாக இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுஅறிவித்துள்ளதாக வெளியிடப்பட்ட செய்திகளை கண்காணிப்புக்குழு நிராகரித்துள்ளது.

போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் இது போன்ற சிறிதும் யோசிக்காத இத்தகைய தொனியில் தெரிவிக்காத கருத்துக்களை செய்திஸ்தாபனங்கள் வெளியிட்டமை குறித்து கண்காணிப்புக் குழு கவலைதெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒரு சிக்கலான நிலையில் இருக்கின்ற சூழலில் உணர்வுகளை எரியூட்டுகின்ற வகையில் ஊடகங்கள் செயற் (12ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

your friend in the skies...



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 2349999/ 8888

கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொதுக்கட்டமைப்பு உருவாக்க முயற்சி

# பாராட்டுகிறார் அமெ.முன்னாள் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடனான உத்தேச பொதுக்கட்டமைப்பினை உருவாக்க எடுத்த முயற்சியானது அவரின் துணிச்சல் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது. அது வரவேற்கத்தக்கதொன்றே தவிர விமர்சனத்திற்குரியது அல்ல என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும் கடல்கோள் நிவாரணப் பணிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவருமான பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த பில் கிளின்ரன் இலங்கைக்கு புறப்பட முன்னர் சென்னையில வைத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

அதன போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் பிரச்சினையிலோ, அரசியலிலோ தலையிடுவது தனது வேலையல்ல. பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நிவாரண உதவிகள் வழங்குவது என்று தீர்மானிப்பதும் அங்கு எத்தகைய பணிகள் நடைபெற்றுள்ளன என பதைப் பார்வையிடுவதுமே தனது பணி எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்திற்கும் மேலாக இலங்கை ஜனாதிபதி உள்நாட்டுக் கலவரத்தில் தனது ஒரு கண்ணை இழந்திருக்கிறார். தனது கணவரைப் பறிகொடுத்திருக்கிறார். இவ்வளவு இழப்புகளையும் மீறி தன் நாட்டு மக்களுக்கு அயராது சேவையாற்றி வருகின்றார். அவரது சேவையையும் குறைதது மதிப்பிட முடியாது எனக் குறிப்பிட்ட பில் கிளின்ரன், இலங்கையில் இரு தரப்பிலும் சமரசம் ஏற்பட்டு அமைதி திரும்ப வேண்டும் என்பதுவே ஐக்கிய நாடுகள் சபையின் விருப்பம் எனவும் கூறினார். (04)

## விடுதலைப்புலிகள் விவகாரம்;

# உள்துறை அமைச்சர் ஜெ.வுக்கு பாராட்டு

(சென்னை)

விடுதலைப்புலிகள் விவகாரத்தில் தமிழக் அரசு எடுத்துவரும் நடவடிக்கை சரியானதே என மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடந்த 22ஆம் திகதி கடிதம் எழுதி இருந்தார்.

அக்கடிதத்துக்கு பதில் அளித்து மத்திய உள்துறை அமைச்சா சிவராஜ பட்டீல் கடந்த புதன்கிழமை எழுதிய கடிதத்தில், விடுதலைப் புலிகள் விவகாரத்தில் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு தனது பாராட்டையும் திருப்தியையும் தெரிவித்துக்கொள்கிறது. விடுதலைப்புலிகள் விவகாரத்தில் நீங்கள் எடுத்துவரும் நடவ்டிக்கைகள் பற்றி மத்திய அரசு நன்கு அறிந்துள்ளது.

பிரதமர் கலந்துகொண்ட முதல்வர்கள் மாநாட்டில் நீங்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைவராலும் பாராட்டபபட்டன. தமிழகத்தில் விடுதலைப்புலிகளை ஒடுக்கும் விஷயத்தில் உங்கள் கருத்து மிகவும் சரியானது. நீங்கள் தெரிவித்த கருத்துக்களை முடிந்த அளவுக்குச் செயல்படுத்த விரும்புகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளது.(ற)

# தேர்தல் இடாப்பு மீளாய்வு ஜூன்-1 இலிருந்து ஆரம்பம்

(கொழும்பு)

2005ஆம் ஆண்டுக்கான தேர்தல் இடாப்புக்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானநத திஸாநாயக்க தெரிவித துள்ளார்.

நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் தேர்தல் இடாப்பு மீளாயவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுதொடர்பாக கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கும் விசேட செயலமர்வுகள் பிரதேச செயலக மட்டத்தில் தற்போது இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் முதலாம் திகதி யன்று 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் தமது பெயர்களை புதிதாக தேர்தல் இடாப்புக்களில் பதிவு செய்துகொள்ள முடியும்.

ஒரே நபர் பல தொகுதிகளில் தமது பெயர்களைப் பதிவுசெய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு பதிவுசெய்யும் நபர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறான இரட்டைப்பதிவு மோசடிகளைத் தடுப்பதற்கு இம்முறை விசேட ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுளளது.

உரிய தகைமைகளை, கொண்டவர்கள் தமது பெயர்களைப் புதிதாக பதிவுசெய்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் மேலும் அறிவித்துள்ளார். (ற-8)

# கொள்கைகளை செயற்படுத்துகையில் எழுகின்றன பல்வேறு பிரச்சினைகள்

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசின் கொள்கைகளை செயற்படுத்தும்போது பல தடைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக விவசாய பிரதியமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அரசின் பங்காளிகளிடையே பிரச்சினைகள் ஏற்படுவதே இந்த நிலைமைக்குக் காரணமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே விமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

கொள்கை வரைபை செயற்படுத்தும்போது பல தடைகளைச் சந்திக்க நேரிடும். அரசின் கொள்கைகளுக்கு செல்வதா? மக்கள் வழங்கிய ஆணையின்படி செல்வதா? அல்லது கொள்கை, மக்கள் வழங்கிய ஆணை என்பவற்றுக்கு மாறாக செல்வதா? என்ற பிரச்சினை தோன்றலாம். மின்சாரசபை தொடர்பில் இவ்வாறான ஒரு பிரச்சினை வந்தது. சுனாமி பொதுக் கடடமைப்பு தொடர்பாகவும் இவ்வாறான பிரச்சினை தோனறியுள்ளதாக அவர் மேலும். தெரிவித்தார். (ற-8)

## அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இம்முறை க.பொ.த.உயர்தர பரீட்சைக்கும் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் பாரம்பரிய முறைப்படியான நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் அதிபர் இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ச-4)

# இராசி பலன்

30.05.2005

(வைகாசி 16, திங்கட்கிழமை)

ஸப்தமி முற்பகல் 10.39 மணிவரை

அவிட்டம் முற்பகல் 06.47 மணிவரை

சதயம் பின்னிரவு 05.23 மணிவரை

இராகுகாலம்- 7.22- 8.52 மணிவரை

சுபநேரம் 11-52 -1.22 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, தொழில் முன்னேற்றம், கலந்துரையாடல். |
| இடபம் | செல்வாக்கு, தொழில் நன்மை, புதிய முயற்சி, எதிர்பாராத நன்மை. |
| மிதுனம் | புதிய திட்டமிடல், அபகீர்த்தி, பிரயாணம், பிறர் உதவி. |
| கடகம் | தொழில் நன்மை, வாகன பயம், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | தெய்வதரிசனம், காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை. |
| கன்னி | தொழில் ஆர்வம், உடல் நலம், பகைவர் நேசம், காரிய நன்மை. |
| துலாம் | போசன சுகம், குடும்பக் கவலை, சகோதரர் உதவி, காரிய தாமதம். |
| விருச்சிகம் | மனச்சோர்வு, புதிய விடயம், தொழில் வருமானம், முயற்சி தாமதம். |
| தனுசு | கௌரவமான நிலை, அந்நியர் சந்திப்பு, கூட்டுமுயற்சி, பொருள்சேர்க்கை. |
| மகரம் | சொத்துக்களால் நன்மை, விவாதம், கோபப் படுதல், போசன சுகம். |
| கும்பம் | சிந்தனை மிகுதி, எடுத்தகாரியம் கைகூடும், செல்வாக்கு, பிறர் உதவி. |
| மீனம் | பிறர் நன்மை, காரிய தாமதம், உணர்ச்சி வசப்படல், சுப செலவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

# தொண்டர் அமைப்புக்களுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை

## ஹேம குமார நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த வீடுகளை மீள நிர்மாணிப்பதற்கு முன்வந்துள்ள தொண்டர் அமைப்புக்களுக்கு தேவையான ஒத்துழைப்பை அரசாங்கம் வழங்கவில்லையென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களுக்குத் தேவையான வீடுகளை அமைப்பதற்கான காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

தொண்டர் நிறுவனங்களுக்குத் தேவையான காணிகளை வழங்க அரசினால் முடியாமையே இந்த நிலைமைக்குக் காரணம். இதனால் தொண்டர் அமைப்புகள் தனியார் காணிகளை கொள்வனவு செய்து வீடுகளை அமைத்துக் கொடுக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற-8)

# குப்பை கூழங்களை அகற்றுவதற்கு மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது

(கொழும்பு)

பாடசாலைகளில் குப்பை, கூழங்களை அகற்றும் நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது என்று தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மழை பெய்வதினால் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் இருபபதாக தெரிவிக்கும் டெங்கு தடுப்பு பிரிவின் வைத்திய நிபுணர் லக்கின் டி சில்வா, இவ்வாறான நடவடிக்கைகளில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துவது ஆபத்தானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட சம்பவங்களுடன் ஒப்பிடும்போது இந்த விடயம் குறித்து கூடுதல் கவனம் செலுத்துவது கட்டாயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் பாடசாலை மாணவர்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் என்றும் தேசிய டெங்குப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு தடுப்பு தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிப்பது அவசியமானது என்று வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# மன்னிப்புக் காலம் நீடிப்பு

பாதுகாப்புப் படையிலிருந்து தப்பிச்சென்று தலைமறைவாகி வாழ்ந்து வரும் இராணுவ வீரர்கள் சட்டபூர்வமாக ஓய்வுபெறும் வகையில் பொதுமன்னிப்பு காலம் மீண்டும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிவரை இவர்களுக்கு பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. சிங்க றெஜிமென்ட், விஜய றெஜிமென்ட் படைபிரிவு வீரர்களுக்கே இந்த பொது மன்னிப்புக்காலம் வழங்கப்பட்டுள்ளது. (ற-8)

# மனைவியின் வீட்டைச் சேதப்படுத்திய நபருக்கு கடூழியச் சிறை விதிப்பு

(துன்னாலை)

தனது மனைவியின் வீட்டினை சேதப்படுத்திய நபரொருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றில் 6 மாத கடூழிய சிறைவிதிக்கப்பட்டதுடன் அவரது மனைவிக்கு ரூபா ஒரு இலட்சத்து 500 நட்டஈடு வழங்குமாறும் பணிக்கப்பட்டது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நாச்சிமார் கோவிலடி கலட்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் தான் மணம் முடித்த மனைவியை கைவிட்டுவிட்டு மறுமணஞ்செய்து கொண்டார். பின்னர் ஒருநாள் குடிப்பதற்கு பணம் இல்லாததால் தான் கைவிட்ட முதல் மனைவி வீட்டுக்குச்சென்று பணம் கேட்டு தொல்லை கொடுத்தார். பணம் கிடைக்காத காரணத்தால் அவளின் வீட்டிற்குள் புகுந்து பொருட்களை சேதப்படுத்தியதுடன் சமையலறைக்குத் தீயும் வைத்தார். பாதிக்கப்பட்ட பெண்ணின் முறைப்பாட்டை பதிவுசெய்த பொலிஸார் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் குறித்த எதிராளியை 6 மாதம் கடூழியச் சிறை வைக்குமாறும் குறித்த வீட்டின் சேதத்திற்காக ரூபா 1 இலட்சத்து 500 நட்டஈடாக கொடுக்குமாறும் உத்தரவிட்டார். (ற-101)

# போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் அமைப்பினரால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நேற்று முன்தினம் யாழ.மத்திய கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

19 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாம் இடத்தையும் கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி முதலாம் இடத்தையும் கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ற-9)

# ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளில் செயலற்ற நிலையில் இலங்கை அரசு!

## புட்டுப் புட்டு வைக்கிறது இங்கிலாந்தின் டெலிகிராப் நாளிதழ்

(இலண்டன்)

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணகளில் இலங்கை அரசு செயலற்றுக் கிடபபதாக இஙகிலாந்தின் டெலிகிராப் நாளிதழ் குற்றம் சாட்டியுள ளது.

28ஆம் திகதியிட்ட டெலிகிராப்பில் இடம்பெற்றுள்ள இந்தச் செய்திக் கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தென்னிலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட காலி பகுதியைப் பார்வையிடச் சென்ற போது அங்கே தென்பட்டது அனைத்தும் கூடாரங்கள்தான்.

பல மில்லியன் பணத்தைக் கொட்டிக்கொடுத்த இங்கிலாந்து மக்கள், ஆழிப்பேரலையால் பாதிக்கப்படடோருக்கான வீடுகளைக் கடடத் தங்களது தொகையால் செங்கற்களும் சீமெந்தும் மரங்களும் லொறி லொறியாக அந்த மக்களுக்குச் சென்றடைந்திருக்கும் என்று கற்பனை செய்து கொண்டிருக்கும் என எண்ணுகிற அவர்கள், உண்மை நிலையைப் பார்த்தால் மூச்சடைநது நின்றுவிடுவார்கள்.

அந்தப் பகுதியல் இப்படியான ஒரு நிகழ்வுக்கு இடமே இல்லை. ஒரு லொறி கூடக் கிடையாது.

இது குறித்த சிங்கள ஊடகவியலாளர் சுகத்பால கருத்துத் தெரிவிக்கையில்,

இங்கே தற்காலிக கொட்டகைகளில் மக்கள் மட்டும உறங்கவல்லை, பணிகளைச் செய்ய வேண்டிய அனைவருமே உறங்கித்தான் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

இந்த அவலத்திற்கு அவர் தெரிவிக்கின்ற காரணம், எல்லாத் தோடம்பழங்களும் (நிதியுதவிகளும்) தனது கூடையிலேயே சேகரிக்கப்படவேண்டும் என்கிற அரசின் எண்ணத்தால் மீளமைப்புப் பணிகள் மிக மிக மெதுவாக நடைபெறுகின்றன என்கிறார்.

தற்காலிக கொட்டகைகள் ஒரே அறையைக் கொண்டவைதான். தகரக் கூரைகளால் அமைக்கப்பட்டவை. இவை பாதுகாப்பானதும் அல்ல. இந்தக கூரைகளை அமைக்கும்போது மரங்களுக்கான ஆணி அடிப்பதால் அவை பாதிப்படைந்து ஒழுகிவிடும் என்று கூறும் தன்னார்வ அமைப்புடன் தொடர்புடைய பொறியியலாளர்கள் இது குறித்து அரசிடம் எச்சரித்ததாகவும் தொிவித்தனர். யாரும் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை.

ஐ.நா. சபையின் அறிவித்தல் ஒன்றையும் எமது டெய்லி டெலிகிராப் செய்தியாளர்கள் பார்வையிட்டனர். அதில் இந்தத் தற்காலிகக குடியிருப்புகள் ஒரு மாதத்திற்குள்ளாகவே அதற்கு முன்னதாகவே தரம் உயர்த்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் நிர்வாகத்தைச் சுட்டிக்காட்டிப் பேசும் தன்னார்வ அமைப்பினர், அதன் இயலாமையை, ஆற்றாமையை வெளிப்படுத்தினர்.

காலியில் இனனும் தற்காலிக கொட்டகைகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகினறன. ஆனால் உள்ளூர் அரசு நிர்வாகமோ, சர்வதேச கண்களில் இவர்கள் பட்டுவிட்டால் தமக்குக் கெடட பெயர் என்று எண்ணி இந்தத் தற்காலிகத் தங்குமிடங்களை அதிகாரபூர்வமாக மூடப்போவதாக அறிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் யதார்த்த நிலைமைகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே அடிப்படை தொடர்பின்மையையே இது காட்டுகிறது.

அரசின் இந்த அறிவிப்பை மக்கள் என்றும் எளிதில் மறந்து விடமாட்டார்கள். அது கோபத்தையும் கொந்தளிப்பையும் ஒவ்வொரு நாளும அதிகரிக்கவே செய்யும் என்றார்.

தற்காலிக தங்குமிடத்தில் இருப்பவர்களும், எந்த அதிகாரியும் எங்கள் நிலை குறித்து அக்கறைப்பட்டது இல்லை என்கின்றனர். கடுகொட மசூதி அருகே அமைக்கப்பட்டுள்ள தங்குமிடத்தில் உள்ள ஒருவர், 2003ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ளத்தினால பாதிக்கப்பட்ட தமது வீடுகள் இன்னும் சீரமைக்கப்படவில்லை. ஆனால அரசியல்வாதிகளின் வீடுகள் ஒரே இரவில் சீரமைக்கப்படுகிறது என்று குமுறுகிறார்.

அரசு அறிவித்தபடியான நிவாரண உதவித் தொகை குறித்து அனைவரும் புகார் தெரிவிக்கின்றனர். அரசாங்கம் அறிவித்தபடியான 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை 5 முறை வழங்கபபட்டிருக்க வேண்டும். ஆனால் 2 முறைதான் இதுவரை வழங்கப்பட்டிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் கழான உலர் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கான உணவுக் கூப்பன்களைப் பெற இன்னும் இவர்கள் காத்திருக்கிறார்கள்.

இப்பகுதியைப் பார்வையிட காலி மாவட்ட கூடுதல் செயலாளர் வீரக்கோன், 7551 வீத பணிகள் முன்னேற்றகரமாக நடநது வருவதாக ஆவணங்களைக் காட்டுகிறார்.

அரசு அறிவித்த 5ஆயிரம் ரூபா தொகை வந்து கொண்டிருக்கிறது. வடுபட்ட பெயர்கள் இணைக்கப்பட்டிருக்கிறது என்று அரசு அதிகாரி வீரக்கோன பதிலளிக்கிறார்.

ஆழிப்பேரலையால் உரிய ஆவணங்கள் ஆழிந்து போய் உதவித் தொகைககாக காத்திருப்போர் எண்ணிக்கையும் அதிகம் என்ற உண்மை ஒருபுறமிருக்க அரசு அதிகாரிகள் இப்படியான அறிக்கைகளைத் தயாரிக்கின்றனர்.

மக்களின் குமுறல்களும் முறையீட்டு மனுக்களும் அவர்களுக்குப பயன்படுகிற பொருள்களாக மாற வேண்டும் என்பதே எமது விருப்பம் என அக்கட்டுரையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுரை இலங்கை அரசின் செயலற்ற தன்மையைச் சர்வதேச சமூகத்திற்கு அம்பலப் படுத்தியிருக்கிறது என்பதை டெலிகிராப்பின் ஒப்பீனியன என்ற பகுதி வெளிப்படுத்தியுள்ளது.

'வெக்கங்கெட்ட சிறீலங்கா' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்தக் கட்டுரை இலங்கை அரசாஙகத்தின் ஆற்றாமையை, இயலாமையை அம்பலப்படுத்தி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# வைரவிழா போட்டிகள்

(பொன்னாலை)

நல்லூர் சங்கிலியன் மற்றும் சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

50 மைல் சைக்கிள ஓடடம், 6 பேர் கொண்ட 5 ஓவர் கிரிக் கெற் சுற்றுப் போட்டி, பாட்டுக்குப் பாட்டு, 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி, இசை, நடனப் போடடி, வழுக்கு மரம் ஏறுதல், பொது அறிவுப் போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் மேற்படி சனசமூக நிலைய வைரவிழாச் சபையுடனோ நிர்வாகத்திடமோ தொடர்புகொண்டு அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக இதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைககுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ந-49)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பினால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், மரதன் ஓட்டம் என்பவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கான பரிசில்களும், பங்குபற்றிய அணிகளுக்கான சான்றிதழ்களும், 2004 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் வலயரீதியில் முன்னணிப் பெறுபேறு பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழுங்கும் விழா இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. (ந)

# ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து?

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்பு ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டவுள்ளதாக அமைச்சர் ஒருவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களைக் கடடியெழுப்ப அரசாங்கமும விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து பணியாற்றக்கூடிய வகையில் அமைக்க உத்தேசிக்கப்படடிருக்கும் இப் பொதுக்கட்டமைப்பை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாக அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு அரசாங்கத்தில அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஜனாதிபதி அந்த எதிர்ப்புகளைப பொருட்படுத்தாது கட்டமைப்பை ஏற்படுத்துவார் என அந்த அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தனக்கு நெருக்கமான அமைச்சர்கள் சிலரை அண்மையில் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து ஜனாதிபதி சந்திரிகா இந்த விடயம் குறித்து விரிவாக ஆராய்ந்திருப்பதாகவும் அதில் தானும் பங்கு கொண்டதாகவும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# 11 ஆயிரம் இலங்கையருக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

கொரியாவில் 11ஆயிரம் இலங்கையர்களுக்கு ஒரு வருடத்திற்குள் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க கொரிய பிரதமர் லீஹய் ஷான்ங் உறுதியளித்துள்ளதாகப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரிய நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் கொரிய பிரதமருக்குமிடையிலான பேச்சுவார்த்தையின்போது இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சுனாமி மீள் கட்டமைப்புக்கு கொரிய அரசாங்கம வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்த 35 மில்லியன் அமெரிக்க டொலரை விரைவாகப் பெற்றுத் தரவும் கொரியப் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கிடையிலான நட்புறவை புலப்படுத்துவது தொடர்பாக இச் சந்திப்பின்போது கலந்துரையாடபபட்டதுடன்,

இலங்கைக்கு வழங்க உறுதியளித்துள்ள 35 மில்லியன் அமெரிக்க டொலரில் 15 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாகவும் மிகுதியைச் சலுகைக் கடனாகவும் வழங்கவுள்ளதாகவும கொரியப் பிரதமர் உறுதியளித்ததாகத தெரியவருகிறது.

(ந-5)

## இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி வழங்க

# வட - கிழக்கு, மலையகப் பகுதிகளில் தொழில்நுட்ப நிலையங்கள் அமைப்பு

வடக்கு - கிழக்கு மலையகம் உடபட நாட்டின் 233 பிரதேசங்களில தொழில்நுட்ப நிலையங்களை அமைத்து இளைஞர் யுவதிகளுககுப் பயிற்சிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக விஞ்ஞான தொழில்நுப மறுசீரமைப்பு அமைசசர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொழில்நுட்ப அறிவுள்ளவர்கள் வெளிநாட்டுக்குப் படையெடுப்பதைத் தவிர்க்கவும் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் 42 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளதுடன் மேலும் 30 ஆயிரம் படித்த இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பிரதேச ரீதியில் அமைக்கப்படும் தொழில்நுட்ப நிலையங்களுக்கூடாக பெரும்பாலான கிராமிய இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க வழி செய்யப்படும்.

இந் நடவடிக்கையின் போது வடக்கு - கிழக்கு, மலையக இளைஞர் யுவதிகளும் சமமான பயன்களைப் பெறமுடியுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-5)

# லான்ட்மாஸ்ரர் திருட்டு

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்ட லான்ட மாஸ்ரர் பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளது.

கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில் தேர்திருவிழாவைப் பார்க்கச் சென்ற பக்தருடைய லான்ட் மாஸ்ரரே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. (ந-118)

# நிரந்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கான ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு நிறுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவரும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை நிரந்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துளளது.

இது குறித்து அனைத்து மாவட்ட செயலர்களுக்கும் நிதியமைசசு விசேட சுற்றுநிருபம் மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட அனைததுக் குடும்பங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க இதற்கு முன்னர் அரசாங்கம் தீர்மானித்திருந்தது. நிதி மற்றும திட்டமிடல் அமைச்சு விடுத்துளள சுற்றுநிருபத்தின் அடிப்படையில்,

மூன்றாவது சுற்றிலிருந்து அரச மற்றும் நிரந்தர வருமானங்களைப பெறும் குடும்பங்களுக்கு குறித்த கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

அரசாங்கம் எடுத்துள்ள இந்தப் புதிய முடிவு குறித்து நாங்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளா நாயகம் திலக் ரணவிராஜாவிடம் கேட்ட போது இது குறித்து தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக குறித்த தரப்பினருக்குத் தெளிவாக அறிவுறுத்தப்பட வேண்டுமென்று தாம் நிதியமைச்சின் செயலாளாகளுக்கு கோரிக்கை விடுத்ததாகவும அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த கொடுப்பனவை வழங்கும நடவடிக்கைகள் ஆரம்பம் முதலே நிதியமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தொிவித்தார்.

இதேவேளை, சுனாமி அனர்தததம் ஏற்பட்டதன் பின்னர் வருமான வழிகளை இழந்தவர்களுக்கு பாகுபாடின்றி 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இரண்டு தடவையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.வி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

தற்போது சிலருக்கு நிரந்தர வருமான வழிகள் கிடைத்திருபபதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளாா.

இவ்வாறானவர்களுக்கு தொடர்ந்தும் கொடுப்பனவு வழங்குவது இயல்பு ரீதியாக ஏற்புடையது இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றையவர்களுக்குத் தொடர்ந்தும் நிரந்தர வருமான வழி உருவாகும் வரை 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தொடர்ச்சியாக வழங்கியிருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-9)

# பட்டதாரி பயிலுநர் சங்கம் அமைப்பு

(பொன்னாலை)

பட்டதாரி பயிலுநர்களை விரைவில் நிரந்தரமாக்குவது மற்றும் பயிலுநர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் பட்டதாரி பயிலுநர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தின் தலைவராக, கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியர் இரா.அகிலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ந-49)

# இன்று ஒரு தகவல்

## காந்த சக்தி சிகிச்சை

எகிப்து நாட்டு அழகி கிளியோபட்ரா தனது தலையில் ஒரு காந்தக் கம்பியை எடுத்துக்கட்டிக் கொள்வது வழக்கமாம். எதற்கு? அப்படிக் கட்டிக்கொண்டால் அது தனது அழகைப் பாதுகாக்கும் என்று நம்பினார்களாம். அதற்காக இப்போது உள்ள பெண்கள் யாரும் அப்படிச் செய்யவேண்டாம் கம்பியை எடுத்து தலையில் சுற்றிக்கொண்டு தெருவில் நடந்தீர்களானால் பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள்.

இப்போது நான் சொல்ல வந்தது என்னவென்றால் உடல் நலத்தைப் பாதுகாக்க காந்த சக்தியை உபயோகப்படுத்தும் முறை நீண்டகாலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இப்போதும் கூட இடுப்பில் கையில், மணிக்கட்டில் தாமிர கம்பியைக் கட்டிககொள்பவர்கள் இருக்கின்றனர். அதனால் இரத்த அழுத்தம குறைவாகவும் சொல்வார்கள்.

ரஷ்யாவிலும், ஜப்பானிலும் நீண்டகாலமாகவே காந்த சக்தி கொண்ட கழுத்துச்சங்கிலி,இடைவார், பட்டை,நாற்காலி போன்றவற்றையெல்லாம் உபயோகப்படுத்தி ஆஸ்துமா இரத்த அழுத்தம்,மூட்டுஅழற்சி,முடக்குவாதம், சிறுநீரகக் கல் இவற்றிற்கு சிகிச்சை கொடுக்கிறார்களாம். காந்த சக்தி கொண்ட தண்ணீரை உபயோகப்படுத்திக் கூட சில நோய்களைத் தீர்த்து வைத்திருக்கிறார்களாம்.

விஞ்ஞான பூர்வமாகப் பார்க்கும் போது நமது உடம்பில் இருக்கும் ஒவ்வொரு கலமும் ஒரு மின் அலகு அதற்கென்று ஒரு காந்த தளம் ஒவ்வொரு உறுப்பைச் சுற்றியும் உள்ளது. இதிலிருந்து நேர் அயனியும் எதிர்மின் அயனியும் வெளிப்படுகிறது. இந்த இரண்டும் வெளிப்படும் அளவு, சமநிலை, தரம் போன்றவற்றைப் பொறுத்து உடல்நிலை நன்றாக இருக்கும் அல்லது நோய் உண்டாகும்.

இரத்தத்தில் இரும்புச் சத்து உள்ளது. அதில் காந்த தளம் செயல்படும்போது இரத்த ஓட்டத்திற்கு ஒரு ஊக்கம் கிடைக்கிறது. புரோட்டபிளாசத்தை அயனீகரமாக்கி வளர்ச்சி மாற்றத்தை ஊக்கப்படுத்துகிறது. பல திசுக்களின் வழியாக மின்னோடம் போகும் போது கொலஸ்ட்ரோல்,கல்சியம்,யூரியா சிறுநீரகக்கல் போன்றவற்றின் மீது செயல்புரிந்து வேண்டாத கழிவுப்பொருளை சிறுநீர் மூலமாக வெளியேற்றிவிடும் இப்படித்தான் காந்த சக்தி சிகிச்சை முறை பற்றி அது சம்பந்தமான மருத்துவர்கள் விளக்கம் கொடுக்கின்றனர்.

காந்த சக்தியை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.ஒன்று தலசிகிச்கை,இரண்டாவது பொது சிகிச்சை, மூன்றாவது காந்த சக்தி கொண்ட தண்ணீர மூலமாக கொடுக்கும் சிகிச்சை மின் ஓட்டத்தையும் காந்த சக்தியையும் ஒன்றாகச் சேர்த்து மின் காந்த சிகிச்சை முறை என்ற ஒன்றை சோவியத் நாட்டில் கண்டு பிடித்திருக்கின்றனர். லேசர் சிகிச்சையாலும் அறுவை சிகிச்சையாலும் குணமடையாத இரைப்பை புண்ணை இந்த மின் காந்த அலைகள் மூலமாகத் தீர்த்து வைத்துவிடுகிறார்களாம். மின் சக்தி சிகிச்சை என்பது ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிறது.

1987இல் ஜெனியா அயர்டன் என்ற 15 வயதுப் பெண் பிள்ளை 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொண்டு உலக சாதனையை ஏற்படுத்தினார். கொஞ்ச நாட்களில் அந்தப் பெண்பிள்ளைக்கு இடது காலில் ஏதோ ஒரு வலி ஏற்பட்டதாம். அதனால் அதற்குப் பிறகு சில போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டதாம். அதைச் சரிப்படுத்த எத்தனையோ சிகிச்சையளித்தும் சரியாகவில்லை. கடைசியாக நுண்மின்சிகிச்சை மூலம் சரிப்படுத்தினார்களாம்.

தலைவலி, இடுப்புவலி, கால்சுளுக்கு, முதுகுவலி, கழுத்துவலி போன்றவற்றிற்கெல்லாம் இந்த சிகிச்சை உடனடியாகப் பலன் தருவதாக அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் பல்கலைக்கழக மருத்துவத்துறை அறிக்கை சொல்கிறது. இந்த மின் சிகிச்சையும் காந்த சிகிச்சையும் சேர்ந்ததுதான் மின் காந்த சிகிச்சை முறை. வருங்காலத்தில் இதுபோன்ற மருந்தில்லாத வைத்திய முறைகள் மிகவும் பிரபலமாகிவிடும் போலிருக்கிறது. அப்படியானால் அது நல்லது தான் ஏனென்றால் மருந்தின் விலையும் அதிகமாகியிருக்கிறது. அதன் பக்க விளைவும் அதிகமாக இருக்கிறது. ஒரு வியாதிக்கு கொடுக்கும மருந்து அதைத் தீர்த்து விட்டு அதற்குப் பதிலாக இன்னொரு வியாதியை உண்டாக்கி விட்டுப் போய்விடுகிறது.

மனிதனைச் சுற்றி மட்டுமல்ல செடிகொடி, புழு பூச்சி, விலங்குகள் போன்ற அனைத்தையும் சுற்றிக்கொண்டு ஒரு போர்வை மாதிரி மின்காந்த சக்தி இருக்கிறதென்று விஞ்ஞானத்தல் கண்டுபிடித்திருக்கின்றனர். ஒரு காந்தத்திற்கு இரண்டு துருவம் உள்ளது. ஒன்று வடக்கு இன்னுமொன்று தெற்கு இப்போது உதாரணத்திற்கு உடலில் ஒரு பகுதியில் தாங்க முடியாத வலி இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். வலி உள்ள இடத்தில் தென்துருவத்தையும் வடதுருவத்தை பாதிக்கப்பட்ட பகுதிக்கு எதிர்ப்பக்கத்திலும் வைத்தால் நல்ல பலன் கிடைக்கும். “எங்கள் வீட்டிலும் காந்த சிகிச்சை முறை நல்ல பலன் கொடுக்கிறது சார்” என்றார்.எனக்குத் தெரிந்த ஒருவர் “எப்படி?” என்று கேட்டேன் “பொதுவாக உலகத்தில் கணவன் மனைவி இரண்டுபேரும் எதிரெதிர் துருவமாக இருக்கிறார்கள் என்று சொல்வது உண்டு. ஆனால் நாங்கள் அப்படி இல்லை சார். எங்கள் வீட்டில் இரண்டுபேரும் ஒரே துருவமாக இருக்கிறோம். அதனால் எங்களுக்குள் வம்பே வருவதில்லை” என்றார் மிகவும் பெருமையாக. “எப்படி அது சாத்தியம்?” என்று கேட்டேன் ஆச்சரியமாக. “இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை சார் ! காந்தத்தில் ஒரே துருவம் கவர்வதில்லையே அதனால் எங்கள் வீட்டில் ஒரு துருவம் சண்டைக்காக நெருங்கி வந்தால் இன்னொன்றும் அதே துருவமாக இருப்பதனால் உடனே விலகி எட்டத்தில் ஓடிப்போய்விடும்”என்று விளக்கம் கொடுத்தார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேசப்பற்றுள்ளவர்களின் 'பிளக்'குகளை ஜப்பான் வங்கிகள் கழற்றியுள்ளனவா?

## வினாவெழுப்புகிறார் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக கடுமையான நிலைப்பாட்டிலிருந்த ஜே.வி.பி அமைதியான கொள்கையை கடைப்பிடிப்பதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் கண்டி மாவட்ட மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜே.வி.பியின் செயற்பாடுகள் மாறியதைப் போல் டோக்கியோ பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கும் ஜே.வி.பியின் தலைவர் மாறியுள்ளார். இது அவர்களின் செயற்பாடுகளில் தெரிகின்றது.

பொதுக்கட்டமைப்புக்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி வேகமாக மேற்கொண்டு வருவதாக எரிக் சொல்ஹெம் அறிவித்த போது இதனைக் கொண்டு வந்தால் அரசிலிருந்து விலகப்போவதாக ஜே.வி.பி கூக்கிரலிட்டது.

ஆனால் தற்போது சத்தமில்லை. இதற்கு மாறாக எமக்கு எதைக் காண்பிக்கின்றனர்?

ஜே.வி.பியின் தலைவர்கள் உலகத்தை சுற்றிவருகின்றனர். சோவன்ஸ அமரசிங்க ஜப்பானில் வைத்து டோக்கியா பிரகடனத்துக்கு நிபந்தனைகளுடன் இணங்கத் தயாராகவிருப்பதாக தெரிவித்ததாக ஜப்பானின் செய்திச் சேவை தெரிவித்தது.

டோக்கியோ பிரகடனத்தில் என்னவுள்ளது? அதில் இந்த நாட்டின் வடக்கும்-கிழக்கும் தமிழர்களின் தாயகம் இந்த இரண்டு பிரதேசங்களிலும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது. இந்த இரண்டு பிரதேசங்களிலும் சமஷ்டி அரசாங்கம் நிறுவப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

இதனால் உலக வங்கியின் “பிளக்கை” கழற்றச் சென்ற தேசப்பற்றுள்ளவர்களின் “பிளக்குகளை” ஜப்பான் வங்கிகள் கழற்றியுள்ளனவா என்பது குறித்து எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

(ந-8)

# அரசை விமர்சிக்கும் பிரதியமைச்சர்களை கண்காணிக்க புதிய அமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து கொண்டு சில விடயங்களில் விமர்சனங்களை வெளியிட்டு வரும் பிரதியமைச்சர்களை கண்காணிக்க புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இநத அமைப்புக்குத் தலைவராக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் இணைந்து பரதியமைச்சர் சிறிபதி சூரியராய்ச்சி அமைப்பின் ஏற்பாட்டளராக செயற்படுவார்.

அரசுக்கு எதிரான இவ்வாறான பிரதியமைச்சர்களினால் அரசாங்கம் பாரிய பின்னடைவைச் சந்திப்பதால் அதனை முறியடித்து அரசாங்கத்தை உரிய முறையில் வழி நடத்துவதே புதிய அமைப்பின் பணியாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-4)

# மூவர் நீக்கப்பட்ட உத்தரவை விலக்கிக் கொண்டது மு.கா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து 3 பாராளுமன்ற உறுப்பினர்களை நீக்கிய உத்தரவை அக்கட்சி நேற்று முன்தினம் மீண்டும் விலக்கிக் கொண்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தியமைச்சர் சமீர் அலி தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது பாலியல் புகார் உள்ளிட்ட கடும் குற்றச்சாட்டுக்களை அமீர் அலி,ரிஷாத் பதியுதீன், நஜிப்ர மஜித் ஆகியோர் எழுப்பியிருந்தனர்.

இதையடுத்து முஸ்லிம் காங்கிரஸிலிருந்து மூவரும் நீக்கப்பட்டனர். இவர்கள் தற்போதைய ஆளும அரசின் அமைச்சர்களாக இருக்கின்றனர்.

மூவருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அனுப்பி வைத்துள்ள கடித்தில் மூவரும் தெரிவித்திருந்தது போல விளக்கம் அளிப்பதற்கு உரியகால அவகாசம் அளிக்கவில்லை என்பதை ஏற்று அவர்களை நீக்கியதாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திரும்பப் பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் மூவரின் சார்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், அலி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் நீடிப்பதா இல்லையா என்பது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைக்காக சிறிது கால அவகாசம் தேவை என்றார்.

(ந-4)

# சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்காக நிதியுதவி வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தொிவித்துள்ளார்.

விசேடமாக இலங்கையில் வைத்தியசாலைக் கட்டமைப்பின் முன்னேற்றத்திற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இணங்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கயரோகம், புற்றுநோய் என்பன இலங்கையில் அதிகரிப்பது குறித்து ஆராய்வதற்கு விசேட தொழில்நுட்பக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கும் உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் வைத்தியசாலைக் கட்டமைப்போடு குறிப்பிட்ட நோய்கள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கையொன்றை தயாரிப்பதற்கான விசேட செயற்திட்டத்திற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்கவும் அந்த அமைப்பின் பணிப்பாளர் இணங்கியிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-9)

# சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் உயிர்பிழைத்த 500 சிறுவர்கள் மாயம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையில் உயிர் பிழைத்து ஒவ்வொரு இடங்களில் இருந்ததாகக் கூறப்படும் சுமார் 500 சிறுவர்கள் பற்றி எதுவிதத் தகவல்களும் இல்லை என அச்சிறுவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி சபையிடம் புகார் செய்துளளனர்.

கிடைக்கப் பெற்றிருக்கும் முறைப்பாடுகள் சம்பந்தமாக தாங்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ள போதிலும் அதில் எந்தக் குழந்தையும் உயிருடன் இருப்பதாக தங்களுக்கு இதுவரை தகவல் கிடைக்கவில்லை என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர சில்வா தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை, தங்காலை, காலி, மாகாலி ஆகிய பிரதேசங்களில் இருந்தே அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆழிப்பேரலைக்குப் பின்னர் இச்சிறுவர்கள் உயிர் வாழ்ந்துள்ளதாக பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் இவர்கள் பற்றிய எந்தத் தகவலும் இப்பகுதி பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கப் பெறவில்லை என காணாமல் போன சிறுவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து தாங்கள் பொலிஸ் நிலையங்களிலும முறைப்பாடு செய்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

சிறுவர்கள் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளும் சில நிலையங்களில் இச் சிறுவர்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக இந்தப் பெற்றோரும் உறவினர்களும் தெரிவிக்கின்றனர். எனினும் அவ்வாறான எந்தவொரு சிறுவர்களையும் தங்களின் பாதுகாப்பில் இல்லை என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் ஹரேந்திர சில்வா தெரிவித்தார்.

ஆழிப்பேரலையில் தமது தாயையோ அல்லது இருவரையுமோ இழந்த சிறுவர்கள் பற்றிய கணக்கெடுப்பினை நடத்தி அறிக்கை சமர்ப்பித்ததைத் தவிர அவர்களை எந்தவொரு நிறுவனத்தினதும் பொறுப்பில் தாங்கள் விடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதனால் தமது அதிகாரசபை பாதிக்கப்பட்ட சிறுவர்களை வைத்திருப்பதாக பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூறுவதில் எதுவித உண்மையும் கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-4)

# தமிழகப் பயணம்

5

## ஆட்டோ – ஷேர்ஆட்டோ

பயணக் கட்டுரை

அரச பஸ்சேவை, புகையிரத சேவை என்பூவற்றுக்கு அப்பால் ஆட்டோ - ஷேர்ஆட்டோ என்பவற்றின் சேவை தமிழகத்தின் போக்குவரத்து நெருக்கடியினைத் தவிர்ப்பதற்குப் பேருதவி யாற்றுகின்றன.



ஒவ்வொரு பஸ்தரிப்பு நிலையத்திலும், ஆட்டோ சாரதிகள் பயணிகளின் முகத்தைப் பார்ப்பார்கள். யாரேனும் நடந்து போனால் போதும். காதலியை நெருங்கிச் செல்லும் காதலன் போல, நடந்து செல்பவர்களுக்கு அருகில் சென்று ஏறுங்களேன் ஏறுங்களேன் என்று வற்புறுத்துவார்கள். சிலவேளைகளில் அதுவே பெருந்தொந்தரவாகி விடும்.

ஆட்டோவுக்கென்று நகரங்கள் தோறும் சங்கங்கள் உண்டு. ஆட்டோ சாரதிகள் காக்கிச்சேட்டும், காக்கி ரவுசரும் போடுவது கட்டாயமானதாகும். அது அவர்களின் சீருடை. சீருடை இல்லாமல் எவரும் ஆட்டோ ஓட முடியாது.

கொழும்பு, யாழ்ப்பாணம், தமிழகம் இம் மூன்று இடங்களிலும் உள்ள ஆட்டோ சாரதிகளுக்கிடையே நிறைய வேறுபாடுண்டு. கொழும்பில் ஆட்டோவை நம்பி ஏற முடியாது. எந்த நேரத்திலும் அவர்கள் ஏமாற்றிவிடுவார்கள். சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதே சிங்களப் பொலிஸாரின் கடமையாக இருந்தது.

கொழும்பு நகரின் பாதுகாப்புக் கருதிக் கைது செய்கின்றோம் எனப் பொலிஸார் தெரிவித்தாலும், உள்ளார்ந்த நோக்கம் தமிழ் இளைஞர்களிடம் காசு பறிப்பதாகும்.

பொலிஸாரின் இக் கபட நோக்கத்திற்கு உதவியாக இருந்தவர்கள் கொழும்பில் உள்ள ஆட்டோ சாரதிகளே!

ஆட்டோவில் ஏறியவர்கள் தமிழர்கள் என்று தெரிந்தாலே போதும், தமக்குத் தெரிந்த பொலிஸாரிடம் கொண்டுபோய் கொடுத்துவிடுவார்கள்.

பொலிஸாரின் கைக்குள் கனதியாக வைத்தால்தான் கம்பி எண்ணாமல் தப்பலாம் என்ற உண்மையைத் தெரிந்தவர்கள் கச்சிதமாகக் காரியத்தை முடிப்பார்கள்.

பொலிஸார் தமக்குக் கிடைத்த தொகையில் ஒரு பகுதியை ஆட்டோ சாரதிகளுக்குத் தரகுக் கட்டணமாகக் கொடுப்பர். இது கொழும்பில் நடந்து முடிந்த நிஜங்கள்.

ஆனால் தமிழகத்தில் ஆட்டோ சாரதிகளிடம் ஏமாற்றுவேலை, கொள்ளையடிப்பு எதுவுமே கிடையாது.

பெண்களைக் கடத்திச் செல்கின்ற இழிநிலையும் இல்லை.

ஆக, செல்ல வேண்டிய இடத்திற்கான கட்டணத்தை மட்டும் மிக உச்சமாகக் கூறிக்கொள்வார்கள். அவர்கள் கூறுகின்ற கட்டணத்தில் மூன்றில் ஒரு பகுதியைத் தருவதாகக் கேட்டால் கூட சம்மதித்துவிடுவார்கள்.

எதற்கும் கட்டணத்தை அறப்பேசி, பயணிப்பதுவே நல்லது என்ற உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

சென்னை மாநகரில் பார்க்குமிடமெங்கும் நிறைந்து நிற்கும் ஆட்டோக்களுக்கு அடுத்தபடியாக ஷேர் ஆட்டோ சேவை முக்கியம் பெறுகின்றது. ஷேர் ஆட்டோ என்பதும் முச்சக்கர வண்டியே! எனினும் அதில் ஒரே தடவையில் 10 பேர் பயணிக்க முடியும். யாழ்ப்பாணத்தில் தனியார் மினிபஸ் போன்று அங்கு ஷேர் ஆட்டோக்கள் பஸ்தரிப்பு நிலையத்திற்குச் சென்று பயணிகளை ஏற்றிச் செல்லும்.

பஸ் கட்டணத்தை விட ஷேர் ஆட்டோவின் கட்டணம் இரட்டிப்பானது. ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள் என்பவற்றில் பொதுவான விளம்பரங்கள், அறிவுறுத்தல்கள் எழுதப்பட்டிருக்கும்.

"பெண்ணின் திருமண வயது 21"
"வளைவில் முந்தாதே"
"மழைநீரை சேமிப்போம்"
"வாழக் கல்"

போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருக்கும் இதனை அரசே செய்திருக்கின்றது. ஆட்டோக்களில் எழுதப்பட்ட "பெண்ணின் திருமண வயது 21" என்ற வாசகம் பற்றி ஆட்டோ சாரதி ஒருவரிடம் கேட்டேன். எனது குரலைக் கேட்டவுடனேயே சார் நீங்கள் சிலோனா என்றார். ஆம் என்பதை தலையசைவு மூலம் கூறிக்கொண்டேன்.

எனது கேள்விக்குப் பதில் தருவதில் அவர் தாமதிக்கவில்லை. "சார் எங்க நாட்டில சனங்கள் ரொம்ப பெருகிப் போச்சு. அதனைக் கட்டுப்படுத்துவதற்காக பெண்களின் திருமண வயது ஆகக் குறைந்தது 21 ஆக இருக்க வேண்டுமென அரசு வரையறுத்துள்ளது" என்றார்.

அவரின் விளக்கத்திற்குப் பின்னர் ஆட்டோக்களில் எழுதப்பட்ட வாசகங்களை மேலும் உன்னிப்பாகப் பார்த்தபோதுதான் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளும் எழுதப்பட்டிருந்ததைக் கவனித்துக் கொண்டேன். (வளரும்)

என். விஜயன்

---

## சோமவன்சவின் கடவுச்சீட்டு

# விமான நிலையத்தில் எச்சரிக்கை ஒலி; ஜயந்ததனபாலவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஜப்பான் செல்லும் போது அவருக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம் முறையிடப்பட்டுள்ளது.

ஜப்பானின் அழைப்பின் பேரில் ஜே.வி.பியின் குழுவினர் ஜப்பான் சென்றனர் இதன்போது அவர்கள் விசேட அதிதிகளுக்கான வழியின் ஊடாக செல்லாமல் சாதாரண பயணிகள் செல்லும் வழியின் ஊடாகவே வானூர்திக்குச் சென்றனர்.

இதன்போது சோமவன்ஸ அமரசிங்கவின் கடவுச்சீட்டை வானூர்த்தித் தளத்திலிருந்த அடையாளம் காணும் இயந்திரம் பெற்றுக் கொண்டதும் விசேட சமிக்ஞையை எழுப்பியது.

இதனையடுத்து வானூர்தி மைய அதிகாரிகள் மத்தியில் பரபரப்புநிலை ஏற்பட்டது. எனினும், உடனடியாக அரசாங்க அமைச்சர் ஒருவர் வானூர்தி மையத்துடன் தொடர்பு கொண்டு நிலைமையினை வழமைக்குக் கொண்டுவந்தார்.

சாதாரணமாகக் குற்றம் இழைத்த ஒருவரின் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் அடையாளம் காணும் இயந்திரம் சமிக்ஞையை எழுப்பும். இந்த நிலையில் சோமவன்ஸ அமரசிங்கவின் கடவுச்சீட்டு இன்னும் இந்தத் தரத்திலிருந்து அகற்றப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

விசேட விருந்தினர்களுக்கான வழியாகச் செல்லும் போது கடவுச்சீட்டை பயன்படுத்தத் தேவையில்லை என்பதால் முன்னர் இவ்வாறு இடம்பெற வில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ற-4)

# இலங்கையின் சனத்தொகையில் 2 சதவீதமானோர் மனநோயாளிகள்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த சனத் தொகையில் 2 சதவீதமானோர் மனநோய்க்குள்ளாகியுள்ளதுடன் மேலும் 20 சதவீதமானோர் ஓரளவு உளவியல் பாதிப்புகளுக்குள்ளாகியிருப்பதாகவும் அங்கொடை மனநோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜெஹ்ஹான் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மனநோயால் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சிறிதளவு அதிகரித்துள்ளது.

இதனால் மனநோய் பாதிப்புக்குள்ளானோருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு அரசாங்கம் தற்போதைய நிலையை விடக் கூடுதலான அக்கறையுடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சின் தகவல்களின் படி உளவியல் மருத்துவ சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மனநோயாளர் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகின்றது.

ஏற்கனவே மிகிந்தலை, வலஸ்முல்ல, கேகாலை ஆகிய பிரதேசங்களில் இத்தகைய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-9)

### அதிபர்களுக்கான செயலமர்வு

இன்று திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலயத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்குமான செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வை.செல்வராசா அறிவித்துள்ளார். (118)

# வாகனக் கடத்தலைத் தடுக்க பொலிஸார் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

தெற்கில் வாகனங்களை கொள்ளையிட்டு வன்னிப் பிரதேசத்தில் அவற்றை விற்பனை செய்யும் முயற்சிகளைத் தடுப்பதற்கு பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

வடமத்திய மாகாணத்தில் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனைகளை அதிகரித்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே தெரிவித்துள்ளார்.

மதவாச்சி, மல்லம்பிட்டி, வெலிகந்த பிரதேசங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

போலி ஆவணங்களை வைத்து வாகனங்கள் கடத்தப்படுகின்றன. இவற்றைக் கண்டுபிடிப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் உடனடித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாணத்தில் மரம் தறித்தல், புராதன சின்னங்களை கொள்ளையிடுதல் போன்றவற்றையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ற-5)

# வட - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்

## சேகு இஸ்ஸதீன் கோரிக்கை

(கொழும்பு)

ஆழிப்பேரலைக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்புக்குப் பொதுமக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வடககு- கிழக்கின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடாத்தப்படவேண்டுமென தகவல் ஊடகத்துறைப் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் அரசாங்கத்திடம் கோரிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம் இளைஞர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் பிரதியமைச்சரைச் சந்தித்த பின்னரே அமைச்சர், இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் மக்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லக்கூடிய பிரதிநிதிகள் எவரும் உள்ளூராட்சி மட்டத்தில் தெரிவு செய்யப்படவில்லை.

2002 பெப்ரவரியில் நடந்திருக்க வேண்டிய வடக்கு - கிழக்குக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பலமுறை ஒத்திவைக்கப்பட்டு வந்தன. ஆனால் இன்றைக்கு அதனை நடாத்த வேண்டிய கட்டாய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

சுனாமி அழிவினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அந்தந்தப் பிரதேசங்களுடைய பிரதிநிதிகள் அவசியமாகின்றனர். எனவே வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்தப்படுவது அவசியமாகும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம் மக்களுக்கான பொறுப்பை நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில், அரசாங்கத்துடன் இணைந்துள்ள பிரதியமைச்சர்களுக்கு ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் ஆதரவு வழங்கினால் மாத்திரமே முஸ்லிம்களும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடமுடியும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-4)

# சிறுவர் அரங்கம்



## கெடுவான் கேடு நினைப்பான்

முன்னொரு காலத்தில் பஸ்மாசுரன் என்ற அசுரன் சிவபெருமானை நினைத்துக் கடுந்தவம் செய்தான். அவன் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவன் முன் தோன்றினார்.

"பஸ்மாசுரனே! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். தருகிறேன்?'' என்றார்.

"நான் யார் தலையில் கை வைத்தாலும் அந்தத் தலை சுக்குநூறாக வெடித்துச் சிதற வேண்டும். இதுதான் நான் கேட்கும் வரம்'' என்றான் அவன்.

"அப்படியே தந்தேன்'' என்றார் சிவபெருமான்.

"சிவபெருமானே! நீர் தந்த வரம் உண்மையிலேயே ஆற்றல் உடையதா என்பதை அறிய விரும்புகிறேன். என் கையை உம தலையில் வைத்துப் பார்க்க வேண்டும். உம் தலையைக் காட்டும்'' என்றான் அவன்.

'கொடியவனுக்கு வரம் தந்து விட்டேனே. எனக்கே ஆபத்து வந்து சேர்ந்ததே' என்று நினைத்த சிவபெருமான் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். பஸ்மாசுரன் அவரைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தான்.

வழியில் சிவபெருமானைச் சந்தித்த திருமால்,

"ஏன் இப்படி ஓடி வருகிறீர்? என்ன நடந்தது?" என்று கேட்டார்.

பஸ்மாசுரனுக்கு வரம் கொடுத்த கதையைச் சொன்ன சிவபெருமான்,

"அந்தப் பஸ்மாசுரன் என்னைத் துரத்தி வருகிறான்'' என்றார்.

"நீர் கவலைப்படவேண்டாம். இங்கு எங்காவது ஒளிந்து கொள்ளும். நான் அந்தப் பஸ்மாசுரனைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்ற திருமால், பேரழகுடைய பெண்ணாக மாறினார்.

சிவபெருமானும் ஒளிந்து கொண்டார்.

அங்கு ஓடி வந்த பஸ்மாசுரன் அந்தப் பேரழகியைக் கண்டதும் தான் வந்த வேலையை மறந்தான். எப்படியாவது அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்தான்.

"பெண்ணே! பேராற்றல் வாய்ந்த பஸ்மாசுரன் நான். என்னைக் கண்டால் மூவுலகும் நடுங்கும். இப்பொழுது கூட எனக்கு அஞ்சி ஓடிய சிவபெருமானைத் துரத்திக்கொண்டு வந்தேன். உன் பேரழகைக் கண்டு மயங்கிவிட்டேன். என்னைத் திருமணம் செய்துகொள். இந்திரனையே உனக்கு பணிவிடை செய்ய வைக்கிறேன்'' என்றான்.

அவன் மீது மோகப் பார்வையை வீசிய மோகினி,

"உங்களைத் திருமணம் செய்து கொள்வதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். அந்த ஆற்றிற்குச் சென்று தலையில் தண்ணீர் தெளித்துக் கொண்டு வாருங்கள்'' என்றாள்.

மகிழ்ச்சியுடன் அவன் ஆற்றிற்குச் சென்றான். தன் கையில் தண்ணீரை எடுத்துத் தலையில் வைத்தான்.

அவ்வளவுதான். பெற்ற வரத்தின்படி அவன் தலை சுக்குநூறாகி வெடித்து அங்கேயே இறந்தான்.




சிறுவர்களே!

கெட்டவர்களுக்கு அழிவு அவர்களது செயல்கள் மூலமே வருகிறது பார்த்தீர்களா? பஸ்மாசுரன் நல்ல வரம் ஏதாவது கேட்டிருந்தால் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்திருக்கலாம் அல்லவா?

எனவே, நல்லதையே நினைக்கவேண்டும்; நல்லதையே செய்யவேண்டும்.

## பட்டம்



தம்பி விட்ட பட்டம்
தாவி ஏறும் பட்டம்
தும்பி போலும் பட்டம்
துள்ளி ஏறும் பட்டம்

நூலில் நிற்கும் பட்டம்
நுனியிலாடும் பட்டம்
வாலை ஆட்டும் பட்டம்
வட்டம் போடும் பட்டம்!

வாடைக் காற்றில தெற்கில்
வானில் ஓங்கி ஏறும்!
ஓடுஞ் சோழ கத்தில்
உயர்ந்து நிற்கும் வடக்கில்!

பொள்ளல் வந்து விட்டால்
பொய்யர் வாழ்வு போலே
துள்ளி ஏறல் இன்றித்
துவண்டு மண்ணில் வீழும்!

ச.வே.பஞ்சாட்சரம்

## விண்வெளி அதிசயங்கள்


- பூமி தன்னைத்தானே ஒரு மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுற்றிக் கொள்கிறது.
- பூமி சூரியனை வினாடிக்கு 20 மைல் வேகத்தில் சுற்றி வருகிறது.
- சூரிய மண்டலம் நட்சத்திர மண்டலத்தை வினாடிக்கு 13 மைல் வேகத்தில் சுற்றி வருகிறது.
- நட்சத்திர மண்டலம் பிரபஞ்சத்தில் வினாடிக்கு 200 மைல் வேகத்தில் சுற்றி வருகிறது.
- நட்சத்திர மண்டலத்திற்கு அப்பால் உள்ள பிரபஞ்சப் புற வெளியில் உள்ள பிரபஞ்சத் தீவுகள் வினாடிக்கு 100 மைல் வேகத்தில் பிரபஞ்சத்தை வலம் வருகின்றன. அல்லது விரிந்து செல்கின்றன.

N.கீர்த்திகா, யாழ்ப்பாணம்.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்!

அன்புக்குழந்தைகளே!

விதம் விதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசை தானே! இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.



## சிங்கக்குட்டி என்ன சாப்பிடும்?



சிங்கக்குட்டி பிறந்தவுடன் தாய்ப்பால் குடிக்கும். சிறிது வளர்ந்ததும் பெண் சிங்கம் வேட்டையாடிய உணவைக் கொண்டு வந்து குட்டிகளுக்குக் கொடுக்கும் மூன்று வயதில் வேட்டையாடுவது எப்படி என்று அம்மா சிங்கம் குட்டிகளுக்குச் சொல்லிக் கொடுக்கும். சிங்கம் மட்டுமே ஒட்டகச் சிவிங்கியைத் தாக்கும். மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும். சிங்கம் சரியான சோம்பேறி. இதற்கு பசித்தால் மட்டுமே சுறுசுறுப்பு வரும். இரை தின்றதும் தூங்க ஆரம்பித்துவிடும். பிறகு பசிக்கும் வரை ஓய்வுதான்.

சிங்கம் 15 ஆண்டுகள் உயிர் வாழும். இதன் கர்ப்பகாலம் 100 நாட்கள். சிங்கம் பூனை குடும்பத்தைச் சேர்ந்தது. சிங்கம் 240 கிலோ எடை வரை வளரும்.

ஆண் சிங்கம் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் தூங்கும்.

சிங்கம் சில சமயங்களில் புல்லைத் தின்னும். சிங்கம் அடித்துச் சாப்பிடும் மிருகங்கள் புற்களைச் சாப்பிடுவதால், அதன் உடலில் சேர்ந்து வைத்துள்ள சத்துக்களும் சிங்கத்தின் வயிற்றுக்குள் செல்கின்றன. இதனால் சிங்கத்தின் வயிற்றில் பிரச்சினை ஏற்படுவதில்லை. அப்படியே வயிற்றுப் பிரச்சினை வந்தால் சிங்கம் புல் தின்று உடம்பைத் தேற்றிக் கொள்ளும்.

கிழட்டுச் சிங்கத்தை இளசுகள் அடித்துவிடும். வாலில்லாக் குரங்கைக் கண்டால் மட்டுமே சிங்கம் பயப்படும். சிங்கமும் புலியும் ஒரே காட்டில் வாழாது.

சிங்கம் ஒரே தடவையில் 1 முதல் 6 குட்டிகள் வரை போடும். ஆண் சிங்கம் சாப்பிட்ட பிறகு பெண் சிங்கம் சாப்பிடும். அதன் பிறகே குட்டிகள் சாப்பிடும். 2 வயதிலேயே முழு வளர்ச்சி பெற்று விடும் சிங்கம்.

* * *

## விடுகதைகள்

1. பட்டமரம் இரண்டு படாதமரம் நான்கு விசிறி இரண்டு வெண்சாமரம் ஒன்று. அது என்ன?
2. பச்சை பச்சை டொக்டர் பால் பால் டொக்டர் குண்டு சட்டி டொக்டர் குதிரை வால் டொக்டர். அது என்ன?
3. படுத்துத் தூங்காத விலங்கு. பந்தயத்தில் ஓடும் விலங்கு. அது என்ன?
4. பச்சைப் பசேல் பசப்புக்காரி பக்குவமாகச் சமைத்தாலும் கசப்புக்காரி. அது என்ன?
5. பஞ்சை அதிகம் உண்டு. படுத்தே கிடக்குது. அது என்ன?

சான்றோர்களுடைய நூல்களுடனேயே பழகு. சால்பின்றி சாமர்த்தியம் மட்டும் உடையவர்களுடைய நூல்களைக் கையால் தொடக்கூடச் செய்யாதே.

-மெல்வில்

விடைகள்

விடுகதைகள்

1. மாடு 2. வெற்றிலை, பாக்கு சுண்ணாம்பு, புகையிலை
3. குதிரை 4. பாகற்காய்
5. தலையணை

## உலகின் மிகப் பெரியவை

- உலகின் மிகப் பெரிய மருத்துவமனை - கிங்கண்டிரி. இது நியூயோர்க்கில் உள்ளது.
- உலகின் மிகப் பெரிய நாணயச் சாலை- பிலடெல்பியா. இது அமெரிக்காவில் உள்ளது.
- உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி - நயாகரா. இது அமெரிக்காவில் உள்ளது.
- உலகின் மிகப்பெரிய ரயில் நிலையம் -சென்டரல் டெர்மினல்ன்ட். இது நியூயோர்க்கில் உள்ளது.
- உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்- அபடான். இது பாரசீக வளைகுடாவில் உள்ளது.
- உலகின் மிகப் பெரிய மலர் - ரஃப்லீசியா.

# நம்மவர்கள் வெளிநாடு சென்றதால்

## எமது கலாசாரம் சீர்பெற்றுள்ளது

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம் சீர்பெற்றுள்ளதா? சீரழிந்துள்ளதா? என்ற விவாத அரங்கிற்கு, சீர்பெற்றுள்ளது எனத் தமது வாதங்களை முன்வைக்கின்றனர் யோ. கிருபானந்தம் மற்றும் நெடுந்தீவு வே. சிவாகரன்.**

### விவாத அரங்கு -8

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும், உலகமயமாக்கல் என்ற காலகட்டத்தில் எம் நாட்டவர் தற்போதை உலக அமைப்புக்கு ஏற்ப புதிய கலாசாரத்தை எமக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். இம் மக்கள் எல்லோராலும் பாராட்டத் தக்கவர்கள்.

கல்தோன்றி மண்தோன்றுவதற்கு முன் தான் தமிழ் தோன்றியது என்று சொன்னார். ஆனால் அபபோது கலாசாரம் தோன்றியது என்றும் யாரும் கூறவில்லையே? பண்டைக்காலத்தில் அனைத்து மக்களும் இயற்கையுடன் ஒட்டித் தான் வாழ்ந்தனர். அன்று தொட்டு இன்றுவரை வெளிநாட்டவர்கள் அறிவு மிக்கவராகவே காணப் படுகின்ற மனிதனுக்கு வெட்கம் என்ற உணர்வு வரும்போது மனிதன் தன்னுடைய அங்க உறுப்புகளை மறைப்பதற்காகவே மேலாடையைக் கண்டுபிடித்தான். இது கூடவே ஒரு வளர்ச்சியின் பங்கு. நம் மக்கள் என்ன செய்தனர் ஒரு முழம் துணி தூக்கிச் செருகிக் கொண்டனர்.இதுதான் நம் நாட்டு கலாசாரமா? அப்போது மனிதர்களுக்கு உணர்ச்சி என்ன நிலையில் இருந்திருக்கும்.

நம் நாட்டு மக்கள் வெளிநாட்டவரின் கலாசாரம் பழக்கவழக்கங்களை அறிந்து கொள்வதன் மூலம் முதன் நிலைப்படுத்துவதன் மூலம் புது அறிமுகத்தையும், அனுபவத்தையும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் எம் நாட்டு மக்களுக்கு மேல் நாட்டு கலாசாரத்தை அறிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கின்றனர். இதனால் இவர்கள் போற்றப்படவேண்டியவர்கள். விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல.

இப்போதைய கலாசாரம் மனிதனை இலகுவாக்க தொழில் துறையில் சுறுசுறுப்புடன் இயங்க

**யோ. கிருபானந்தம்**
**யாழ்ப்பாணம்**

வைக்கின்றன கலாசாரத்தை எம் மக்களுக்கு உணர்த்துகின்றது.

எப்படி எனின் வெளிநாடு போய் வரும் நம்மவர்களின் ரீசேட் ஜீன்ஸ் என்பன ஓடியாடி வேலை செய்வதற்கு இலகுவானது: தற் பாதுகாப்பு உடையதுமாகக் காணப்படுகின்றது.

"இங்கு ஔவையாரின் ஒரு கருத்தை எடுத்துரைக்கிறேன் "உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு" என்று ஔவையார் சொன்ன கூற்று யாருக்கு நம்மவர்க்கா அல்லது வெளிநாட்டவருக்கா? நம்மவர்களுக்குத் தானே.

அளவுக்கு அதிகமாக உணவை யுண்டு காலை மாலை வரை மெகா சீரியல் பார்க்கும் எம்மவர்களுடன் ஒப்பிடும் போது வெளிநாடு சென்று திரும்பி வருவதனால் கலாசாரம் சீரழிந்து போகும் என்பது தவறான கூற்று.

தமிழர்களின் பண்பு விருந்தோம்பல் ஆனால் இன்று விருந்தோ மெகா சீரியலால் அழிந்து போய் விட்டது என்று சொல்வது மிகையாகாது.

"கல்லானையானாலும் கைப் பொருளான்றுண்டாயின்
எல்லோரும் சென்றங்கு எதிர் கொள்வார் - இல்லானை
இல்லாளும் வேண்டாள், ஈன் றெடுத்த தாய் வேண்டாள்
சொல்லாது அவன் வாயிற் சொல்"

என்று சொல்லிச் சென்றவர்களும் எமது முன்னோர்களே! இதன் அடிப்படையிலும் கல்விக் காகவுமே நம்மவர்கள் வெளிநாடு சென்றிருந்தார்கள். ஒருவருடைய கையில் செல்வம் இருக்கும் போது தான் அவனும் அவனது சமூக கலாசாரம் என்பனவும் அபிவிருத்தியடையும், ஒருவனுக்கு பசிக்கும் போது அவனிடம் சென்று கலாசாரத்தைப் பேண் என்று சொன்னால் நாம் பசியாய் இருக்கும் போது ஒருவன் வந்து கலாசாரத்தைப் பேண் என்று சொல்லும் போது நமக்கு எவ்வளவு கோபம் வருமோ அதுபோலத்தான், செல்வம் இன்றி நாமோ, நமது கலாசாரமோ தழைத்தோங்க முடியாது,

வெளிநாடுகளில் இருக்கும் நம் மக்களிடம் நாம் செல்லும் போது அங்கு விருந்தோம்பல் சிறப்பாகப் பின்பற்றப்படுகின்ற ஒரு அம்சம் ஆகும்.

எனவே வெளிநாடு செல்லும் மக்களால் எம் கலாசாரம் சீரழிந்து போனதைவிட எமது கலாசாரத்தில் நவீன உலகிற்கு ஏற்ப புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. ஏற்றுக்கொள்ளத்தக்கதும் ஆகும்.

"எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் வென்றால்
அது எமக்கு படிக்கல், தோல்வி கண்டால்
அது எமக்கு தடைக்கல்" □

### வாதம் -6

நமது கலாசாரம் நம்மவர்கள வெளிநாடு செல்வதனால் சீரழிந்துள்ளது எனச் சிலர் கூறலாம். ஆலயங்களில் அர்ச்சனைத்தட்டுக் காவும் கையில் வீடியோகமரா, அங்கம் தெரியும் அரைகுறை ஆடைகள், அரைக்காற்சட்டை, ஆபாசப் படங்கள் என்று எமது கண்களுக்குத் தெரிகின்றவற்றைச் சொல்லி நியாயப்படுத்தலாம்.

ஆனால் நாம் சற்றுத் தீவிரமாக ஆராய்ந்து நோக்குகின்ற போது நம்மவர்கள் வெளிநாடு செல்வது நம்முடைய கலாசாரம் மேலோங்க ஆதாரமாக அமைந்துள்ளது என்ற உண்மையை உணரலாம். நம்முடைய கலாசாரம் செழிக்க வேண்டுமாயின் நம்முடைய வாழ்க்கை அபிவிருத்தி இன்றியமையாதது. "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று சொன்னவர்கள் எமது முன்னோர்களே. ஏன் எம்முடைய பண்டைய அரசர்கள் வேற்றூருக்குச் சென்று சாதித்த சாதனைகள் மறக்க முடியாதவைகளாகும்.

இன்று எமது இலங்கைத் திருநாட்டில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினைகளின் மத்தியில் ஏராளமான மக்களின் பசிபட்டினிகளைப் போக்கி ஓரளவு செழிப்பாக்கும் நம்மவர்கள் அனுப்பும் வெளிநாட்டுப் பணம் உயிர் வழங்கிகளாகத் தொழிற்படுகின்றன.

நாம் எமது நாட்டில் குறித்த பிரதேசத்திற்குள்ளேயே கிணற்றுத் தவளைகள் போன்று மூழ்கிக்கிடந்தால் நமது கலாசாரம் என்னவாகும்? அன்று வெள்ளையன் எம் நாட்டின் மீது படையெடுத்து அது ஆலயங்கள், பாடசாலைகள், கல்விமுறைகள், கலை கலாசாரங்களையெல்லாம் கொள்ளை கொண்டு சென்றானே.

ஆனால் இன்று அதே வெள்ளையனின் மண்ணில், அவர்களின் மத்தியில் பிரமாண்டமான கோபுரங்களையுடைய ஆலயங்களும், நம் தேவார பாராயணங்களும், வாத்தியக் கச்சேரிகளும் பரதநாட்டியம் போன்ற கலைகளும், கல்விச்சாலைகளும், அறச்சாலைகளும் அவர்களின் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் யார்?

சுவாமி விவேகானந்தா அமெரிக்காவிலே சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போது அங்கு தனித்தனியாக விளித்துப் பேசப் படும் முறையான "**Ladies and Gentlemen**" என்னும் அமைப்பை மாற்றி அமெரிக்காவின் "சகோதர சகோதரிகளே" என்று விளித்து ஆற்றிய உரையானது பார்வையாளர்கள் கண்ணீர் மல்கும்படி கல்லும் கனிந்து உருகும் வண்ணம் எமது கலாசார பண்பாட்டினை எடுத்தியம்பியது.

நாமும் எம்முடைய மொழியும் சர்வ தேசத்தில் தலை நிமிர்ந்து நிறகவும், வியாபித்திருககவும் வழி சமைத்துள்ளது. எமது வெளிநாடுகளில் சென்று இன் தமிழ கரை புரண்டோட செய்ய செய்பவர்கள் யார்?

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பர். இதனைப் படித்த வெள்ளையன் தான் ஒரு இந்து எனக் கூறியமையும் குறிப்பிடத்தக்கது. அங்கு நம்மவர்கள் கால நிலைக் கேற்பவே தத்தமது ஆடைகளையும் அணிகின்றனர். அவர்கள் அங்கு அணிவதனால் தான் இங்கு உள்ளவர்கள் அணிகிறார்கள் என்றில்லை. அப்படியானால் இங்கு அணிபவர்கள் எல்லாம் வெளிநாட்டிற்குச் சென்றவர்களா? அங்கு இருந்து அனுப்புகின்ற உடைகளில் பெரும்பாலானவை இலங்கை தயாரிப்பாக இருப்பது நகைத்தற்குரியதாகும்.

வேற்று மொழியினர் மத்தியில் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்க்குழந்தை "மம்மி" என்று பழக்கப்பட்ட மண்ணில் தனது தாயைப் பார்த்து "அம்மா" என்று அழைக்கின்றது என்றால் அந்த அகரமானது எவ்வளவு அழகான, ஆழமான, அன்பான, சிந்திக்கக் கூடிய அவர்களைப் பிரமிக்க வைக்கக் கூடிய, ஏன் நமது கலாசாரத்தையே நாம் உலகறியச் செய்யக்கூடிய "நாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதியின் கூற்றை நிரூபிக்கக் கூடியதான அமிழ்தமான தம் மொழியினை உலகறியச் செய்கின்றது.

மேலும் "அஞ்சாமை திராவிடனின் உடமை" எனவே தற்காலத்தில் வேற்று நாட்டார் பீரங்கிகளும் துவக்குகளும் கொண்டு நம்மை அடக்க முனைந்தால் நாம் நமது மரபு ஆயுதமான அம்பையும் வில்லையும் கையில் பிடித்தால் தமது நிலை என்ன

**வே. சிவாகரன்**
**நெடுந்தீவு**

ஆகும். எனவே அங்கு சென்று அவர்களின் தொழில்நுட்பங்களையும் கற்று அவர்களிலும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்பதனை வெளிக்காட்ட முடிகின்றது.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்னும் சொல் இங்கு பொருத்தமற்றது. ஏதோ ஒரு சிலரின் செயற்பாடுகளினால், அங்குள்ள காலநிலையை இங்கும் உண்டு என நினைப்பவர்களினால் நமது எல்லோருடைய கலாசாரமுமே சீரழிகிறதென்பதில்லை. இலங்கைச் சமூக காரணிகளின் மத்தியிலும் நமது கலாசாரம் பிறநாடுகளில் உயர்வடைந்துள்ளமை பாராட்டத்தக்கதான விடயமாகும்.

நாம் எமது பிரதேசத்திற்குள்ளேயே கிணற்றுத் தவளை போன்று நமது கலாசாரத்தைப் பரப்பாமல் இருப்போமாயின் என்றோ ஒருநாள் வருகின்ற சுனாமியில் மூழ்கிப்போகாமல் பாதுகாக்கிறது.

எனவே நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் நமது கலாசாரம் இன்றும், இனியும், என்றும் நிலைத்திருக்கும் என்பதனை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவே நமது கலாசாரம் காலத்திற்கேற்ற வகையில் முன்னேறிச் செல்வதென்றே சொல்லலாம். எனவே நம்மவர்கள் வெளிநாடு சென்றது நமது கலாசாரத்தினை சீரழிப்பதைவிட சீர்ப்படுத்துகின்றது என்பதே எனது வாதமாகும்.

வாழ்க தமிழன், வளர்க நமது கலாசாரம். □

# சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்ற விசேட செயற்திட்டம் நடைமுறை

## பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

நாட்டில் புழக்கத்திலுள்ள சட்ட விரோத ஆயுதங்களைக் கைப் பற்றுவதற்கான விசேட திட்டமொன்று செயல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களில் 20 சதவீதமானவைக்கு சட்டவிரோத ஆயுதங்கள் பயன் படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள், பாதாள உலகக் கோஷ்டியினர் மற்றும் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் இந்தச் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை போன்றவற்றைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தியிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ரு-9)

# சினேக பூர்வ கிரி.போட்டி சமநிலையில் முடிவுற்றது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சுழிபுரம் விக்டோரியா அணிகளுக்கும் இடையிலான சினேக பூர்வ 17 வயதிற்கு உட்பட்டோருக் கான கிரிக்கெற் போட்டி கடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல் லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக இ.மயூரன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 76 ஓட்டங்களைப் பெற்றார். இவர் கடந்த வாரம் நடைபெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கு எதிராக 74 பந்துகளில் 129 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் கனரூபன் 5 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்டோரியாக் கல்லூரி அணி முதலாவது இனிங்சில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக ஜெ.செந்தூரன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய விக்டோரியாக் கல்லூரி அணி 9 விக்கெற்றுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கனரூபன் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ஜோயல் செகான் 5 விக்கெற்றைக் கைப்பற்றினார். போட்டிகள் சமநிலையில் முடிவுற்றன. (ரு-39)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள் 6

## கலாநிதி செ. திருநாவுக்கரசு



### பிழையான வரலாற்று நம்பிக்கைகள்

பிழையான ஐதீகங்களின் அடிப்படையில் சிங்கள - பௌத்தர்கள் மத்தியில் நிலைபெற்றுவிட்ட கருத்தியல் நிலைமைகள், இலங்கையின் இனக்குழுவினரிடையே முரண்பாடுகளையும், சமத்துவமின்மையையும் தோற்றுவிக்கக் கால்கோளாயிருந்தன. சிங்கள இனத்தினதும், பௌத்த மதத்தினதும் தோற்றம் பற்றியதான மூன்று ஐதீகங்களைக் குமாரி ஜெயவர்த்தனா தமது கட்டுரையில் பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார்.

''ஆரிய இனம்" பற்றிய ஐதீகமும், சிங்களவர்கள் இனரீதியாக ஆரியர்கள் என்ற நோக்கும்,

'சிகதீப' கருத்தாக்கம். அதாவது விஜயனின் இலங்கை வருகையும், சிங்கள இனம் நிறுவப்பட்டது பற்றிய ஐதீகமும், 'தம்மதீப' கருத்தாக்கமும், புத்தர் இலங்கைக்கு வந்தமையும், அவருக்கும் இத்தீவுக்குமிடையேயுள்ள உறவும் பற்றிய ஐதீகமும். இத்தகைய ஐதீகங்களே நம்பிக்கையாக வளர்த்துக் கொண்டவர்களின் செயற்பாடுகள் பற்றி அநகாரிக தர்மபாலாவின் நூலொன்றிலிருந்து அதே கட்டுரையில்,

''அக்காலப் பகுதியில் பிரபலமாக இருந்த தவறான இக் கோட்பாடுகள், ஐதீகங்கள் யாவும் இலங்கையில் ஒரு வலிமையான தேசிய சித்தாந்தம் இல்லாத நிலையில், தங்களுக்கென்று ஒரு தனித்துவத்தைத் தேடிய பௌத்த மறுமலர்ச்சியாளர்களால் ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவர்கள் இம் மேன்மைக் கொள்கையைத் தழுவிக் கொண்டனர். மகோன்னதமான இறந்தகாலம் பற்றிப் பெருமிதம் கொண்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஆரிய' இனத்துடனும பௌத்த நம்பிக்கையுடனும் சிங்கள மக்களைத் தொடர்புபடுத்தினர்"என எடுத்துக் காட்டுகிறார்.

சிங்கள - பௌத்த மேலாண்மை உணர்வை வளர்த்தவர்கள் இந்த ஐதீகங்களின் அடிச்சுவட்டையே பேணிக்கொண்டனர். இதற்கு மாறான சிந்தனைகளை வெறுத்தொதுக்கினர். இலங்கை ஓர் சிங்கள பௌத்த நாடு. பௌத்தமதம் தழைத்தோங்குவதற்கெனப் புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு (தம்மதீப) என்ற தவறான கருத்து சிங்கள-பௌத்த மக்கள் மத்தியில் போதிக்கப்பட்டு வருகிறது. வட இந்தியாவிலிருந்து ஆரிய இனத்தவனாகிய விஜயன் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தான். அந்த விஜயனது வழித்தோன்றலரே சிங்களவராவர். விஜயன் இலங்கையிற் காலடி வைத்த நேரமும், புத்தபிரான் பரிநிர்வாணமடைந்த நேரமும் ஒன்றாகும். விஜயன் இலங்கையில் காலடி வைக்கும்போது பரிநிர்வாணமடைந்து கொண்டிருந்த புத்தபிரான், இப்பொழுது இலங்கைத் தீவில் காலடி வைக்கும் விஜயனது வழித்தோன்றலரே. பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாக்கப் போகிறவர்களாகையால், அதன் பொருட்டு அத்தீவையும் மக்களையும் பாதுகாக்குமாறு காவல் தெய்வங்களைக் கேட்டுக் கொண்டார் எனவும் கருதப்படுகிறது.

இத்தகைய ஐதீகக் கருத்துக்களை தீபவம்சம், மகாவம்சம் போன்ற இதிகாச - புராண சாயல் கொண்ட நூல்கள் உண்மையான வரலாறாகக் கூறுகின்றன. இதனடிப்படையில் பிற்கால சிங்கள வரலாற்று நூல்கள் பலவும் கூறத் தொடங்கின. அதன் காரணமாக அவை வரலாற்று உணர்வில் பதியவைக்கப்பட்டுள்ளன. பாளி மொழியிலமைந்த உணர்வு நிலை நின்றெழுதப்பட்ட மகாநாயக்க தேரரின் மகாவம்சமே, சிங்கள-பௌத்த முதன்மையுணர்வுக்கு முதலில் இடம் தந்ததெனலாம். இதற்கு முந்திய சுருக்க நூலான தீபவம்சமும் சில ஐதீகக் கருத்துக்களை எடுத்துக்காட்டியிருப்பினும்,

மகாவம்சத்தின போக்கு விசேடமானதெனலாம். இத்தயை நூல்களினாலும், ஜாதகக் கதைகளினாலும் எழுந்த ஐதீகங்களின் அடிப்படையிலான நம்பிக்கைகளே இலங்கைச் சிங்கள-பௌத்தர்களை ஏனைய சிறுபான்மையினர் பால் சந்தேகமும் அவநம்பிக்கையும் கொள்ள வைத்தன.

''சிங்கள இனம் இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு மேற்பட்ட சான்றாதாரமுள்ள தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டது. இலங்கைச் சிங்களவரின் வரலாற்றை விட பழமையான வரலாறு வேறொன்றுமில்லை. இலங்கை சிங்களவருக்குரியது என்ற கருத்து, வெறும் வாய்மொழி மரபாக வழங்கும்.ஐதீகங்களையோ, கட்டுக்கதைகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. பண்டைய குகைச் சாசனங்கள், மாபெரும் பௌத்த தூபிகள், விகாரைகள், பாறைகளில் செதுக்கப்பட்ட புத்தபெருமானின் உருவச் சிலைகள், மிகப்பெரிய குளங்கள், நீர்ப்பாய்ச்சல் முறைமைகள் யாவும் சிங்கள இனத்தினதும், சிங்கள தேசத்தினதும் பாரம்பரியத்திற்கு அசைக்க முடியாத சான்றுகளாகும்.

1980 இல் வெளியிடப்பட்ட பிரசுரமொன்று மேற்கண்டவாறு சிங்கள- பௌத்த உணர்வின் வெளிப்பாட்டைக் காட்டிநிற்கிறது. பௌத்த சமயத்தின் பாதுகாவலர்கள் சிங்கள-பௌத்தரேயென்பதை இன்னொரு பிரசுரமானது எடுத்துக்காட்டுகிறது. அதில் கூறப்பட்ட பிரதான பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

''சிங்கள இனத்துக்கும், பௌத்தத்திற்குமுள்ள தொடர்பு வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவுக்கு மிகவும் நெருக்கமானது. சிங்களவரின்றிப் பௌத்தம் இல்லை. பௌத்தமின்றிச் சிங்களவரில்லை என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது. இது எவ்வாறாயினும் மறுக்க முடியாத உண்மையாகும். சிங்களவரின் இலக்கியம் பௌத்த இலக்கியமே. சிங்களவரின் வரலாறு பௌத்தத்தின் வரலாறாகும். சிங்களமொழி புத்தரின் போதனையால் வளம் பெற்றது. சிங்களவரின் சகாப்தம் என்பது பௌத்த சகாப்தமே ஆகும். சிங்கள கலாசாரம் பௌத்த கலாசாரமாகும். சிங்களவரின் கொடி பௌத்த சிங்களக் கொடியாகும்"

இத்தகைய சிங்கள- பௌத்த மேலாதிக்க உணர்ச்சியின் அடக்க முடியாத வெளிப்பாடுகளே எல்லாளன்-துட்டகைமுனு யுத்தத்திற்கும் சிங்கள-தமிழ் மோதல்களாக வரலாற்று உருமாற்றம் கொடுத்தன என்று கூறலாம். வெறுமனே அரச குழுக்களுக்கிடையான மோதல்களுக்கு இனவாத மூலாம் பூசப்பட்டுள்ளமையும் எல்லாளனது படையணியில் சிங்கள வீரர்களும் துட்டகைமுனுவின் படையணியில் தமிழ் வீரர்களும் கலந்துள்ளமை யை உதாசீனப்படுத்தியமையும், தமிழரசனான எல்லாளன் நேர்மையான செங்கோற் சிறப் பினனாகத் ''தீபவம்சம கூறியபோதும், அவனது குணாதிசயங்கள், பௌத்த மதப் பணிகள் யாவும் மகாவம்சத்தால குறைக்கப்பட்டு, அதன் பின்னால் எழுந்த பூஜாவளி போன்ற நூல் களில் எல்லாளனைக் கொடியவனாகக் கண்டமையுங் கூடச் சிங்கள-பௌத்த மேலாதிக் கத்தின் பிரதிபலிப்புக்களேயாகும்.

''இலங்கையில் நிலவும் சிங்கள- பௌத்த இனவாதத்திற்கு, இனவாத அடிப்படையில் எழுதப்பட்ட வரலாறும் ஓர் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சிங்கள-பௌத்த இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றினை ஆதாரமாகக் கொண்டு பாட விதானங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மற்றும் பொதுசனத்தொடர்புச் சாதனங்கள், கலை-இலக்கியம் என்பவற்றின் மூலமாகவும் பௌத்த நிறுவனமும் சிங்கள- பௌத்த இனவாத அரசியல்வாதிகளும் இனவாத விஷத்தை அப்பாவிச் சிங்கள மக்க ளுக்கு ஊட்டிவருகின்றனர்"

என்று உதயன் கூறுவது நோக்கத்தக்கதாகும். இவர் கூற்றை அரண் செய்வது போலவே பீன்னால் விபரிக்கப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் கூற்றுக்கள் விளக்குகின்றன.

(தொடரும்)

## வலம்புரி
## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
- பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.
- ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலா ளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*-நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

### வடமராட்சி

கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

### தீவகம்

நெடுந்தீவு
மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

### வன்னி

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

# சேது சமுத்திரத் திட்டத்தின் பின்னணி என்ன?

ஒவ்வொரு நாடும் தாம் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு ஏற்ப தமது படைவலுவில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் நேசநாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்து கொள்வதும் ஆயுதக்கொள்வனவுகளை மேற்கொள்வதும் வழமையாக நடைபெற்று வரும் இராணுவ சம்பிரதாயங்கள்.

அதாவது தமது எதிரிக்கும் தமக்கும் இடையிலான இராணுவ சமநிலையை குலைத்து, அதன் மூலம் தமக்குரிய சாதகத் தன்மைகளை விரிவாக்கிக்கொள்வதுதான் இத்தகைய நடவடிக்கைகளின் மறைமுகத் தத்துவம்.

இத்தகைய படைவலு விரிவாக்கல் நடவடிக்கையில் ஒவ்வொரு நாட்டினதும் கடற்படை பாரிய பங்களிப்பு வகிக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. அதற்காகவே உலக நாடுகள் பலவும் கடலாதிக்கத்தை கையகப்படுத்திக் கொள்வதில் தத்தமது பிரதேசங்களில் அயல் நாடுகளிடமிருந்தும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளிடமிருந்தும் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றன. வெறுமனே எல்லைகள மாத்திரம் நாட்டின் வேலிகளாக அமைகின்றபோதும் கடல் எல்லைகள் அதன் இருப்பை மேலும் உறுதி செய்கின்றன.

சர்வதேச தொடர்பாடல் மிக்க கடற்பரப்பை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கும் நாடுகள் பொருளாதார ரீதியில் கேந்திரத் தன்மையைப் பெற்றுக்கொள்வதுடன் வெளிநாடுகளின் பாதுகாப்புக் கூட்டுறவுகளுக்கு பங்காளிகளாகவும் மாறி தமது இருப்பை உறுதி செய்துகொள்கின்றன. உலக நாடுகளில் பெரும்பாலானவை இதற்கு விதிவிலக்கானவை அல்ல.

**இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவம**

இந்து சமுத்திரப் பிராந்தியம் உலகின் பார்வையில் மிகமிக முக்கியமான ஒன்று என்பதில் இரண்டாம் கேள்விக்கு இடமிருக்க முடியாது. சர்வதேச வர்த்தகத்தில் சரக்குகளை கொண்டு செல்லும் அரைவாசி கொள்கலன்கள் இந்து சமுத்திரத்தின் வாயிலாகவே செல்கின்றன.

தெற்காசியாவின் பொருளாதாரப புலியான சீனாவின் எண்ணெய்த் தேவையில் சுமார் 60 வீதமும் ஜப்பானின் எண்ணெய்த் தேவையில் 80 சதவீதமும் இந்து சமுததிரத்தின் ஊடாகவே அந்நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. சுருங்கக்கூறினால் தெற்காசிய நாடுகளுக்கான அனைத்து எண்ணெய்க் கப்பல்களும் மத்திய கிழக்கிலிருந்து புறப்பட்டு இந்து சமுத்திரத்தின் வழியாகவே செல்கின்றன. உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியானவர்கள் இந்தப் பிராந்தியத்திலேயே வாழ்கின்றனர்.


இந்து சமுத்திரத்தின் பொருளாதார ரீதியான முக்கியத்துவம் இவ்வாறு ஒருபுறமிருக்க, இதன் கேந்திர முக்கியத்துவம் தெற்காசியாவில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளுக்கான சிறந்தகளமாக அமைந்துள்ளது என்பது இன்னொரு முக்கியவிடயம். இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் தெற்காசியாவில் பொருளாதாரம், அணு ஆயுதம் உட்பட பல்வேறு துறைகளிலும் வளர்ச்சிகண்டு வரும் நாடுகளை மறைமுகமாக கட்டுப்பாட்டுகளுள் வைத்திருக்கக் கூடிய சக்தியைப் பெற்றுக்கொண்டு விடலாம் என்பதும் அவற்றின் நடவடிக்கைகளை கண்காணித்துக் கொள்ளலாம் என்பது எழுத்தில் இல்லாத தத்துவம்.

**இந்தியா - அமெ.**

இதன்பொருட்டு, இந்து சமுத்திரத்தின் பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியா, இந்து சமுத்திரம் என்பது இந்தியாவின் சமுத்திரமே என்ற எண்ணத்துடனேயே கடந்த காலங்களில் தனது இராஜதந்திர வலைகளை பின்னி வந்திருக்கிறது. ஆனால், இந்தியாவின் இந்த ஏகபோக உரிமைக்கு இடம்கொடுக்க அமெரிக்கா தயாரா? இந்த கேள்விக்குரிய பதிலில்தான் தெற்காசியாவில் இன்னமும் பல அரசியல், இராணுவ படுங்குப்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தெற்காசிய நாடுகளிலுள்ள வளங்களை சுரண்டிக்கொள்ளவும், அங்கு நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கும் மீட்பர்களாக நுழைந்து பிரச்சினைகளுக்கு எண்ணெயூற்றி அதன்மூலம் தனது ஆயுத வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளவும் அணு ஆயுத உற்பத்தி நாடுகளின் மீதான கண்காணிப்பை அதிகரிக்கவும் அவற்றின் இராஜதந்திர நகர்வுகளை நோட்டமிடவும் மற்றும் பல காரணங்களுக்கும் அமெரிககாவுக்கு இந்து சமுத்திரத்தின மீதான அழுங்குப்பிடி அவசியமானதாகும்.

இதன்பொருட்டு இந்தியாவைப் பகைக்காமல் இந்து சமுத்திரத்தில் படிப்படியாக தனது ஆதிக்கத்தை அமெரிக்கா கடந்த காலஙகளில் அதிகரித்து வந்திருக்கிறது. அமெரிக்கா மேற்கொண்ட அரசியல் சாணககியம் மிக்க நகர்வுகளும் தந்திரோபாய நடவடிக்கைகளும் இந்து சமுத்திரத்தை விட்டு அதனை நீக்க முடியாத நிலைக்கு இந்தியாவை இன்று ஆளாக்கிவிட்டது.




இந்து சமுத்திரத்தின் மேற்கு புறத்தில் அரேபியன் கடல் மற்றும் பேசியன் குடா பகுதியிலுள்ள பஹ்ரெய்ன், குவைத், ஓமான், கட்டார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபுகள் இராச்சியம் மற்றும் கென்யா, எகிப்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிய அமெரிக்கா அவற்றுடன் பாதுகாப்பு உடன்பாடுகளையும் மேற்கொண்டு அவற்றில் சிலதில் தனது படைகளையும் குவித்தது.

அதேபோல இந்த சமுத்திரத்தின் கிழக்கு பகுதியில் சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தாய்லாந்து ஆகியவற்றையும் தனது நேசநாடுகளாக்கி கூட்டுப் படைப பயிற்சிகளை மேற்கொண்டு வந்தது.

இந்து சமுத்திரத்தின் இரண்டு பக்கங்களிலும் தனது இருப்புக்களை உறுதி செய்துகொண்ட அமெரிக்கா இந்துசமுத்திரத்தின் நடுவில் டியேோ காசியாவில் கால் பதிதது அதனைத் தனது படைகளின் தளமாக்கிக் கொண்டது தான் அதன் மிகப் பெரிய சாதனை எனலாம். வரலாற்று ரீதியாக எந்த உரிமமும் இல்லாத இத்தீவைக் கைப்பற்றிய பிரிட்டன், 1966 இல் அமெரிக்காவுடன் சேர்ந்து 50 ஆண்டுகால ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. அதனபடி 2017 ஆம் ஆண்டு வரை இரு நாட்டுப்படைகளும் இராணுவ தேவைக்காக அத்தீவைப் பயன்படுத்தலாம்.

அமெரிக்காவை இந்தத் தளம் அமைக்க விட்டதுதான் 1966 இல் இந்தியா விட்ட மிகப் பெரிய தவறாகும். பிராந்திய வல்லாதிக்க சக்தியாகத் திகழும் இந்தியாவின் கனவு அன்றே சுக்குநூறாகி விட்டது. அதன்பின்னர் இடம் பெற்ற பல்வேறு அரசியல், இராணுவ மாற்றங்கள் அனைத்தும் இந்து சமுத்திரத்தை பொறுத்தவரை இந்தியாவுக்கு பாதகமாகவே அமைந்து வந்திருக்கின்றன. அப்போதெல்லாம் அமெரிக்கா தனது பிடியை மேலும் இறுக்கமாக்கிக் கொண்டது.

**டியோ காசியா தளத்திற்கு இணையான திருமலை**

அமெரிக்காவைப் பொறுத்த வரை அதன டியோ காசியா தளத்துக்கு இணையான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் திருகோணமலை ஆகும் ஆம் தமிழரின் தலைநகரான திருகோணமலையேதான் இதனை கையகப்படுத்துவதற்கு அமெரிக்கா மேற்கொண்ட தந்திரோபாய நடவடிக்கைகள் எதுவும் கடந்த காலங்களில் சாதக பலனளிக்கவில்லை.

இந்திராகாந்தி இந்தியப பிரதமராக இருந்த காலப்பகுதியில், திருகோணமலையில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலிக்கான கோபுரம் அமைக்கும் முயற்சி, அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.பி.ஐயின் பின்னணியுடன் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை குத்தகைக்குப் பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சி எல்லாமே அப்போதைய இந்தியப் பிரதமரால் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டன.

பிற்காலத்தில் ராஜீவ்காந்தி கொலையின் பின்னர் இலங்கை விவகாரத்தை கைகழுவிவிட்ட இந்தியாவின் வெளியேற்றத்தால் இலங்கையில் ஏற்பட்ட ஆதிக்க வெற்றிடத்தை நிரப்ப அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வந்தமை ஒன்றும் புதிய விடயமல்ல.

**உடன்படிக்கைக்குப் பின்...**

2002 இல் அமைதி ஒப்பந்தம் கைச்சாததான பின்னர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமெரிக்க சார்பு நிலை அமெரிக்காவை இயல்பாகவே இலங்கையை நோக்கி பிரத்தியேக ஈர்ப்புக்கு உட்படுத்தியது. அசோக வனத்தில் அனுமன் போல இலங்கை விவகாரத்தில் ஆழக்கால் பதித்த அமெரிக்காவின் செயற்பாடுகளை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வந்தது.

பலாலி விமான ஓடுதளப் புனரமைப்பு, அமைதி முயற்சிக்கான ஆக்கபூர்வ பயணங்கள் என்ற போர்வையில் அமெரிக்க உயர் மட்ட இராஜதந்திரிகளின் தொடர் வருகைகள், அவர்களின் திருமலை விஜயங்கள் ஆகியன இந்தியாவின் பார்வையில் வரம்பை மீறிய சகவாசமாகக் கருதப்பட்ட அமெரிககாவின் நடவடிக்கைகள், முயற்சிகள் ஆகியவை இந்தியாவை அவ்வப்போது உஷாராக்கிக் கொண்டிருந்தன.

ஆனால், அண்மையில் விடுதலைப் புலிகளுடனான பொதுக் கட்டமைப்பு யோசனைக்கு அமெரிக்கா தெரிவித்த ஆதரவும் விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா என்றுமே எதிர்க்கவில்லை என்று இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்கா தெரிவித்த கருத்தும் இந்தியாவை இலங்கை விடயத்தில் முடிவெடுக்க வேண்டிய கட்டத்துக்கு தள்ளிவிட்ட காரணிகளாகவே கருதவேண்டியுள்ளன.

அமெரிக்கா இலங்கையில் கொண்டுள்ள உடும்புப்பிடியை இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தளர்த்திக் கொள்ளலாம் என்று இந்தியா போட்ட கணக்கு கடந்த காலங்களில் சரிவரவில்லை. தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க போன்ற ஈழத் தமிழர் ஆதரவுக்கட்சிகளின் பலத்தில் ஆட்சியமைத்துக்கொண்டு, அவற்றின் எதிர்ப்பை மீறி இலங்கை அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்ள முடியாது என்ற யதார்த்தத்தை இந்திய அரசு ஆத்மார்த்தமாகப் புரிந்து வைத்திருக்கிறது.

**சேது சமுத்திரத்திட்டம்**

இவ்வாறிருக்கையில், அமெரிக்க ஆதிக்கப்பிடியை தளர்த்தி இலங்கையை தனது உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வருவதற்கு இந்தியா கையிலெடுத்திருக்கும் கடைசி துருப்புச்சீட்டுத் தான் சேதுசமுத்திரத்திட்டம்.

1860 ஆம் ஆண்டு கப்டன் டெய்லர் என்பவரால் முன்மொழியப்பட்ட இந்த சேது சமுத்திரத்திட்டத்தை சுமார் 145 வருடங்களுககுப் பிறகு இன்று தனது இராஜதந்திர தேவைக்கான கைத்தடியாக தூக்கியிருக்கிறது இந்தியா.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பல காலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதும், கடந்த வாரம் இந்திய அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. சேதுசமுத்திரத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கொழும்பு காலி மற்றும் தென்னிலங்கை துறைமுகங்களுக்குரிய சர்வதேச முக்கியத்துவம் குறைந்துவிடும் என்ற அச்சத்தில் அலறிய இலங்கை அரசின் எதிர்ப்பையும் மீறி திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்த இந்தியாவின் அரசு மட்ட காரியங்கள் ஜரூராகியிருக்கின்றன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அமெரிக்கா மீதான தனது பாய்ச்சலை நேரடியாகக் காண்பிக்காமல் இன்னொரு வழியாக அதை நெறிப்படுத்திய இந்தியாவின் காய்நகர்த்தல்கள் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளை இலக்குவைததிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**புலிகளின் பலம்**

கடல் தொடர்பை கொண்ட பல நாடுகளுக்கு மத்தியில் உலகிலேயே கடற்படையை கொண்ட ஒரே ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு விடுதலைப் புலிகள். இந்த அமைப்பு போரிடும் தாயகப் பிரதேசம் இந்து சமுத்திரத்தில் பெரும் முக்கியத்துவம் வா்ய்ந்த பிரதேசங்களுடன் கடல்தொடர்புகளைக கொண்டிருப்பதுடன் சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட சர்வதேச துறைமுகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இவ்வாறு ஒரு புரட்சி அமைப்பொன்று கடற்படை வலுவுடன் வளர்சசி பெறுவது பிராந்திய சக்தியாக துடிக்கும் இந்தியாவுக்கு ஜீரணிக்கக்கூடிய ஒன்றா?

தற்போது இழுபறிப்படும் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டு விட்டால் அடுத்து விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிய பேச்சு ஆரம்பிக்கும். அமெரிக்காவின் அழுத்தம் இலங்கை அரசை இது விடயத்தில் புலிகளிடம் அடிபணிய வைத்துவிட்டால் அந்த அதிகார சபையின் அனுபந்தங்களின் படி வடக்கு-கிழக்கின் கடல்வளம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வரும். அதுவரை பார்த்திருந்தால் அயலில் உள்ள ஆபத்து நாட்டுக்குள்ளும் வந்துவிடும் என்றஞ்சிய இந்தியா காரியத்தில் இறங்கியது.

'விடுதலைப் புலிகளின் கடற்படையால் இந்தியாவின் இறைமைக்கு ஆபத்து. தற்போது அவர்கள் வான்படையையும் அமைத்து விட்டார்கள். அது இந்தியாவுக்கு மேலும் ஆபத்து' என்ற கோஷங்களுடன் இந்தியா இலங்கையை நோக்கி சேதுசமுத்திரத் திட்டம் என்ற பெயரில் மறைமுக இராணுவக் கரங்களை விரித்துள்ளது.

புலிகளின் கடற்படை, வான் படை அணிகள் ஆகியவை இன்று நேற்று ஆரம்பிக்கப் பட்டவை அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னரே உருவாககப்பட்டவை. ஆனால அவற்றால் தற்போது தான் தனக்கு ஆபத்து வந்துவிட்டது என்று அறிக்கை விடுத்திருப்பதன் மூலம் இந்தியா தனது உள்ளார்ந்த நோக்கத்தை புலப்படுத்திவிட்டது.

சேதுசமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் மன்னார், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய தமிழீழத்தின் துறைமுகங்கள் சர்வதேச தொடர்புகளை பெறவாய்ப்புண்டு. அதுவும் இந்தியாவின் நேரடித் தொடர்பை இவை பெற்றுக்கொள்ளும். இவற்றை புனரமைக்கும் திட்டத்துடன் இந்தியா இலங்கை அரசை அணுகியிருக்கிறது. முதலில் காங்கேசன் துறை துறைமுகத்தைப் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து அமெரிக்கப்பிடியை கழற்றுவதற்கு இந்தியா மேற் கொண்டுள்ள இத்திட்டம் அதன் பிராந்திய இராணுவச் சமநிலையில் எவ்வாறான மாற்றத்தை கொண்டுவரப்போகிறது? அமெரிக்காவை இலக்கு வைத்து இந்தியா ஆரம்பித்துள்ள இந்த நகர்வு இந்து சமுத்திரத்தின் சிறந்த கடற்படையான ஜப்பான் மற்றும் சீனா ஆகியவற்றால் எத்தகைய சவால்களை சந்திக்கப் போகிறது? இயல்பு நிலையே தோன்றாத தமிழர் பகுதிகளில் இப்படியான பாரிய பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் எத்தகைய பலனுக்கு வித்திடவுள்ளன? இந்தியாவின் இந்த நகர்வுக்கு அமெரிக்காவின் பதில் நடவடிக்கை என்ன? ஆகிய கேள்விகள் இத்திட்டத்தின் பின்னணியில் இன்னமும் தொக்கி நிற்கின்றன. □

**நன்றி இணையத்தளம்**

திருச்சியில் பயங்கரம்

# கட்டடம் இடிந்து வீழ்ந்தது

## 25 தொழிலாளர் பலி; 60 பேர் படுகாயம்



(திருச்சி)

திருச்சி அருகே டால்மியா சிமெண்டு ஆலை கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த 25 பேர் கட்டடத்தின் சாரம் சரிந்து அமுக்கியதில் பரிதாபமாக உயரிழந்ததுடன் 60 பேர்வரை படுகாயமடைந்துள்ளனர். 17 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திருச்சி மாவட்டம் லால்குடி அருகில் உள்ள கல்லக்குடி பகுதியில் டால்மியா சிமெண்டு ஆலை உளளது. இந்த சிமெண்டு ஆலையில் கூடுதலாக ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்காக பல மாதங்களுக்கு முன்பிருந்தே கட்டடம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

தொழிற்சாலையின் குடோனிலிருந்து அரவை செய்யும் இடத்திற்கு தேவையான மூலப்பொருடகளை பெல்ட் மூலம் எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்படும் கட்டடம்தான் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் காலை இந்த கன்வேயர் பெல்ட் கட்டடத்திற்கான பக்க சுவர்கள் கட்டும் பணி நடந்துகொண்டிருந்தது. தரையிலிருந்து சுமார் 40 அடி உயரத்தில் இந்தப் பணி நடந்து கொண்டிருந்தது. கடந்த 15 நாட்களுககு முன்புதான் பக்கச் சுவர் கட்டப்படும் பகுதியல் சுமார் 50 அடி நீளத்திற்கு கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டிருநதது என்பது குறிப்பிடத்தக்கது. அதற்காக அமைக்கப்பட்டிருநத சென்டிரிங் கம்பிகளைக் கூட இன்னும் பிரிக்கவில்லை.

பக்கச்சுவர் அமைக்கும் பணியில் சுமார் 39 தொழிலாளாகள் ஈடுபட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் மதியம் பக்கச சுவர் அமைபபதற்கு கான்கிரீட் போடபப்பட்டுக் கொண்டிருந்தது.

அப்போது மதியம் சுமார் 1 மணி அளவில் கடந்த 15 நாட்களுககு முன்பு அமைக்கப்பட்டிருந்த 40 அடி நீளம் உள்ள கானகிரீட் தளம் சரசரவென்ற சத்தத்துடன் 40 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தது. இதல் அதன்மேல் நினறு வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்களும் கீழே விழுந்தனர். அப்போது பணியில ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது கான்கிரீட் தளமும், அதைத் தாங்கிப்பிடிப்பதற்காக அமைக்கப்படடிருந்த சென்டிரிங் தகடுகளும் மேலே விழுந்து அமுக்கியது.

இதனால் இடிபாடுகளுக்குள் சிக்கிய தொழிலாளர்கள் வெளியே வரமுடியாமல் சிக்கித் தவித்தனர். கட்டடம் சரிந்து விழுந்த சத்தம் கேட்டு அக்கம், பக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்களும், தொழிற்சாலைகுள் பணிபுரிந்து கொண்டிருந்த தொழிலாளர்களும் ஓடிவந்து இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது 25 பேர் உயிரிழந்ததுடன 60ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைநத நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்தும மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)

# குமரி அனந்தன் மருத்துவமனையில்!

(சென்னை)

முன்னாள் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் மூச்சுத் திணறல் காரணமாக போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் சென்னையில் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். சமீபத்தில் தண்டி யாத்திரையிலும், வேதாரண்யம் யாத்திரையிலும் நடைபயணம் மேற்கொண்டார்.

ஆஸ்துமா நோயினால் அவருக்கு அடிக்கடி மூச்சுத் திணறல் ஏற்படடு வந்தது. இதையடுத்து போரூர் தனியார் மருத்துவமனயில தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

# இந்திய - பாக் அமைதிப் பேச்சில் ஒருபோதும் தலையிட மாட்டோம்

## அமெ. திட்டவட்டமாக அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியா- பாகிஸ்தான் அமைதிப் பேச்சுக்கான நடவடிக்கைகளில் அமெரிக்கா தலையிடாது என்றும் இரு நாடுகளுமே நல்ல நடபுறவைக் கொண்டுள்ள நாடுகளாகக் கருத்தப்படுகின்றன என்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை உதவி அமைச்சர் கிறிஸ்டினா ரொக்கா கூறியுள்ளார்.

இவர் பாகிஸ்தான் செய்தித்தாள் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவவாறு குறிப்பிட்டுள்ளார்.





அவர் அப் பேட்டியில் மேலும் தெரிவித்துளளதாவது,

இந்தியாவுடன் எங்களுக்கு நல்ல நட்புறவு உள்ளது. இதேபோல பாகிஸ்தானுடனும் எங்களுக்கு நல்ல நட்புறவு உள்ளது. எனவே, இவ்விரு நாடுகளின் அமைதிப் பேச்சுக்களில் நாங்கள் தலையிடமாட்டோம். மத்தியஸ்தராகவும் செயல்பட மாட்டோம். மற்றபடி இவ்விரு நாடுகளுக்குமிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைப் போக்க இவ்விரு நாடுகளினதும் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்போம்.

இந்தியா- பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே அமைதிப் பேச்சுக்கான நடவடிக்கைகள் முன்னேற்றமாக காணபபடுகின்றன. மிக வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவும் பாகிஸ்தானும் எங்களது நட்பு நாடுகள். இரு நாடுகள் எடுக்கும் நடவடிககைகளுக்கும் எங்களின் ஆதரவு உண்டு. இவ்வாறு அவர் கூறினார். (ற)

# ஜப்பான் மீது அணுகுண்டு வீசியது சரியே

## அமெ. விஞ்ஞானி பரபரப்பு பேட்டி

(ஒஸ்லோ)

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான மீது அணுகுண்டு வீசியது சரிதான் என அந்த அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டவர்களில் ஒருவரான அமெரிக்க விஞ்ஞானி பீட்டர் லாக்ஸ் கூறியுள்ளார்.

ஜப்பான். மீது அமெரிக்கா அணு ஆயுத தாக்குதல் நடத்தவில்லையானால், இரண்டாம் உலகப்போரில் மேலும் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும் என பீட்டர் லாக்ஸ தெரிவித்துள்ளார்.

நோர்வே நாட்டின் புகழ்பெற்ற ஏபெல் விருது பீட்டர் லாக்சுக்கு வழங்கப்பட்டது. கணிதத்தில் பெரும் சாதனை செய்தமைக்காக 9 இலட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த விருது வழங்கும் விழாவிற்கு வந்திருந்த பீட்டர் லாக்ஸ் செய்தியாளர்களிடம கூறியதாவது,

இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கா அணுகுண்டு தயாரித்தது. மன்ஹட்டன் திட்டம் என அந்த அணுகுண்டு தயாரிப்புத் திட்டத்திற்கு பெயராகும். அமெரிக்காவில் உள்ள நியுமெக்சிகோவின் லாஸ் அலாமோவில் அந்தத் திட்டம் மிகவும் இரகசியமாக செயல்பட்டது. அந்த அணுகுண்டு தயாரிப்புத் திட்டத்தில் நானும ஒரு விஞ்ஞானியாகப் பணியாற்றினேன். அப்போது எனக்கு வயது 19 ஆகும்.


இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது சரிதான் என்றே நான் கருதுகிறேன். அணுகுண்டு வீசாமல் வேறு இராணுவ நடவடிக்கைகளை ஜப்பான் மீது அமெரிக்கா எடுத்திருக்குமானால், அதனால் மிகப்பெரிய அளவுக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். 1944இல் பிரான்சில் உள்ள நார்மண்டி கடற்கரையில் நேசநாட்டுப் படைகள் பெரிய அளவுக்கு இறக்கப்பட்டன. அப்போது ஏற்பட்ட மோதலில் பெருமளவு உயிர்ச்சேதம ஏற்பட்டது. ஹிட்லர் படைகளை தோற்கடிப்பதற்கு நார்மண்டி யுத்தம் வழியேற்படுத்தியது.

ஆனால், அமெரிக்கா ஜப்பான் மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தியிராவிட்டால நார்மண்டி சண்டையில ஏற்பட்டதை விட பெருமளவு உயிர்ச்சேதம் நிச்சயம் அமெரிக்காவின் ஜப்பான் படையெடுப்பின்போது ஏற்பட்டிருக்கும். ஆயினும் பிற்காலத் தில் எனக்கு ஒரு கருத்து ஏற்பட்டது. அணு ஆயுதம் என்ன செய்யும் என்பதை மனித குலம் நேரிடையாகப் பார்த்ததால் அணுகுண்டு என்றாலே அச்சம் ஏற்பட்டு விட்டது. அந்த அச்சம் சரிதான் என்பதே எனது கருத்து. இவ்வாறு அவர் கூறினார்.

ஹங்கேரி நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட பீட்டர் லாக்ஸ் அமெரிக்க குடியுரிமை பெற்றவர். தற்போது அவருக்கு 79 வயதாகிறது. நியூயோர்க் நகரில் உள்ள கூரான்ட் கணித விஞ்ஞானக் கழகத்தில் அவர் இன்றும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

பீட்டர் லாக்ஸ் கண்டுபிடித்த கணி சூத்திரத்தை, பூமிக்கடியில் உள்ள எண்ணெயை வெளிக்கொணர்வது முதல விமான தொழில்நுட்பம் வரை பயன்படுத்துகிறார்கள். இரண்டாம் உலகப்போரின போது 1945இல், அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி எனும் இரு நகரங்கள் மீது தலா ஒரு அணுகுண்டை வீசியது. இதில் ஹிரோஷிமாவில் 1இலட்சத்து 40ஆயிரம் பேரும் நாகசாகியில் 70 ஆயிரம் பேரும் உடனே பலியானார்கள். பல்லாயிரக்கணக்கானோர் அணுக் கதிர் வீச்சு காரணமாக பின்னர் பலியானார்கள். அணு ஆயுதத தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவிடம் ஜப்பான் சரண் அடைந்தது. நிபந்தனையற்ற சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. (ற)

பெலாரஸ் தலைநாகர் மின்ஸ்க் நகரில் செல்ல நாய்களுக்கான பாஷன் ஷோ, அழகு போட்டி நடந்தது. இதில் ஒரு நாய் பாஷன் ஆடை அணிந்து மேடையை வலம் வந்த காட்சி.



# நேபாளத்தில் பல கட்டமாக தேர்தலை நடாத்த திட்டம்

(காத்மண்டு)

நேபாளத்தில் பல கட்டமாகத் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகக கூறியுள்ளார் மன்னர் ஞானேந்திரா.

எனினும், இதற்கான திகதிகள் எதனையும் அவர் அறிவிக்கவில்லை.

கடந்த பெப்ரவரியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார் ஞானேந்திரா. கடநத ஒரு மாதத்துக்கு முன்பாக, 58நகராடசிகளுக்கு 2006 ஏப்ரலில் தேர்தல் நடததும் திட்டத்தை அறிவித்திருந்தார் ஞானேந்திரா. அதற்குப் பிறகு தற்போதுதான் தேர்தல் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

ஒரு பல்கலைக்கழகத்தல் நடைபெற்ற விழாவில் அவர் இதைத் தெரிவித்தார்.

நகராட்சித் தேர்தல்களை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரவாதத்திலிருந்து ஜனநாயகத்தைக் காக்க உறுதிபூணவேண்டும் என்றார் அவர்.

ஞானேந்திரா பேசுவதற்கு சில மணி நேரத்துக்கு முன்னதாக, காத்மண்டுவில ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டக் கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 7கட்சிகளைக் கொண்ட கூட்டணி இதற்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் 5ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

இதற்கிடையே பாக்லங் மாவட்டத்தில், மன்னர் ஞானேந்திராவை எதிர்த்து போராட்டம் செய்ததாக 20 அரசியல் கட்சித் தொணடர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் எனக்கோரி 7கட்சிக் கூட்டணிகள் மேற்கொணட ஆர்ப்பாட்டத்தின் ஒரு பகுதி இது.

மேலும், சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவுடனேயே, முன்னாள் அமைச்சர் ஒருவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

50க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளை விடுவித்த நோபள அரசு, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி தலைவரும் முன்னாள அமைச்சருமான ஈஷ்வர் போக்ரெல்லை மீண்டும் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# இந்தோனேஷியாவில் குண்டுவெடிப்பு; 22 பேர் பலி; 40 பேர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் சூலவேசி மாகாணத்தில் டென்டெனா நகரில் நடைபெற்ற 2 குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 22 பேர் இறந்துள்ளதுடன் 40க்கும் மேற்பட்டோா படுகாயமடைந்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள சந்தைப் பகுதியில் இந்தக் குண்டுவெடிப்பு நடைபெற்றுள்ளது.

சம்பவ இடத்தில் உடனடியாக புலன் விசாரணையைப் பொலிஸார் தொடங்கியுள்ளனர். காயமடைந்தவாகளில் இருவர் பொலிஸார்.

இதற்கிடையே காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க டென்டெனா மருத்துவமனையில் போதிய வசதியில்லை என அதன் ஊழியர்களில் ஒருவர் தெரிவித்துள்ளாா. காயமடைந்ததவர்களுக்கு ரத்த இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில, இது குறித்துக் கவனம செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

டென்டெனாவில் கிறிஸ்தவர்கள்தான அதிகம் வசிக்கினறனர். அங்கு கடந்த 5 ஆண்டுகளாக முஸ்லிம்கள் - கிறஸ்தவர்களிடையே அடிக்கடி மோதல் நடந்து வருகிறது.

2000ஆம் ஆண்டில் தொடங்கிய மோதலில் 1000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இதைத் தொடாந்து 2001இல் இந்தோனேஷிய அரசின் முயற்சியால் இரு தரப்புக்குமிடையே அமைதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

என்றாலும் கூட வன்முறைச் சம்பவங்கள் தொடர்நது கொண்டுதான் இருக்கின்றன. தற்போதைய குண்டுவெடிப்புதான், அமைதி உடன்படிக்கைக்குப் பிந்தைய மிகப்பெரிய சம்பவமாகக் கருதப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற தொடா குண்டுவெடிப்புகளில், அமைதி முயற்சியில் ஈடுபடும் அமைப்புகளின் அலுவலளகங்கள் பலத்த சேதமடைந்தன. (ற)

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் - குறள்

வலம்புரி

# அமெரிக்காவின் தூயஉதவி தேவை

அமைதிப் பேச்சுக்களை ஆரம்பித்தால் அமெரிக்கா பூரண ஒத்துழைப்பு வழங்குமென அந்நாட்டின் ஜனாதிபதி ஜோர்ச் புஷ் அறிவித்துள்ளார்.

ஜனநாயக நோக்கங்களுக்காக ஆயுதம் ஏந்துவதை எம்மால் அனுமதிக்கமுடியாது எனக்கூறியுள்ள புஷ் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் போது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை தெரிவிக்காமல் விட்டுவிட்டார்.

இலங்கையின் இனவிவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு பக்கச்சார்புடையதாக இருந்துவருவதை தமிழ்மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டத்தை நிறுத்தவேண்டும் என்பதில் அமெரிக்கா காட்டிய அக்கறை, தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வை காண வேண்டுமென்பதில் இருக்கவில்லை.

இலங்கை அரசு எதனைச் செய்தாலும் அது சரிஎன்பது போல அமெரிக்க முடிபுகள் இருந்துள்ளன. இத்தகைய முடிபுகளை அமெரிக்கா எடுப்பதற்கான காரணம் தனது நலன் கருதியே ஆகும்.

யார் எக்கேடுகெட்டாலும் தன் நலனை மட்டும் மையமாகக்கொண்ட அமெரிக்காவிற்கு இலங்கைத் தீவில் தமிழர்கள் படும்பாட்டை உணர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பமும், அவசியமும் இருந் திருக்க நியாயம் இல்லை.

இலங்கைக்குள் தனது ஆதிக்கபலத்தைச் செருகிவிட வேண்டும்மென்பதில் மிகத்தீவிரமாக இருந்த அந் நாடு அண்மைக்காலமாக மௌன நிலையை கடைப்பிடித்து வருகின்றது.

இதற்கு காரணம் அமெரிக்காவின் ஊடுருவலுக்கு இந்தியா ஆப்பு வைத்துவிட்டதா? அல்லது அமெரிக்காவின் விசுவாசியான மிலிந்த மொறகொட அமைச்சு பதவியை இழந்து விட்டமையா? என்ற கேள்விகள் அரசியல் இராஜதந்திரிகளிடையே ஏற்பட்டுள்ளது.

எதுவாயினும் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஏ.பி.குணத்திலக, ஜனதிபதி புஷ்சைச் சந்தித்தபோது கூறப்பட்ட உதவிக்கதைகள் உண்மையானவையா? என்பதற்கு அப்பால் சமாதானத்தைவிரும்பும் மக்கள் அமெரிக்காவிடம் எதிர்பார்ப்பது என்ன? என்பதை அறிவது முதற்தேவையாகும்.

அதாவது தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்த அமெரிக்கா, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மக்களை அடிமைப்படுத்தும் சர்வாதிகாரம் கண்டு அமைதியாக இருப்பது ஏன்?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது பேச்சுக்களை நடத்திய அரசைக்கலைத்த ஜனாதிபதியின் செயல்குறித்து எந்த அபிப்பிராயமும் தெரிவிக்காத அமெரிக்கா-அது ஒரு உள்நாட்டின் அரசியல் விவகாரம் எனக்கூறுமானால், அதனையே நாமும் திருப்பிக் கூறவேண்டிய தாக இருக்கும்.

ஒரு நாட்டின் பிரச்சினையில் இன்னொரு நாடு தலையிடுவதில் எந்தத்தவறும் இல்லை. ஆனால் தலையீடு நடுநிலையானதாக பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நியாயம் தேடித்தரக்கூடியதாக இருக்கவேண்டும். இதைவிடுத்து இந்த உலகில் நான்தான் எல்லாம் என்ற நினைப்போடு தலையிடுவது பாதிக்கப்பட்ட தரப்பிற்கு பாதகமாகச் செயற்படுவது போன்றவை எல்லாம் தலையீடும் முறையல்ல.

எனவே அமெரிக்க ஜனாதிபதி கூறிய ஆதரவை ஒட்டுமொத்தமாக இலங்கை மக்களும் ஏற்றுக்கொள்வதாயின் அதற்காக சமாதானப்பேச்சை உடன் ஆரம்பிக்குமாறும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக்காணவேண்டும் எனவும் அரசை வலியுறுத்த வேண்டும்.


அத்தகையதொரு வலியுறுத்தல் அமுலாகும் பட்சத்தில் அமெரிக்காவின் முன்னால் ஜனாதிபதி பில் கிளிண்டன் மேற்கொள்ளும் உதவி நடவடிக்கைகளும் வெற்றியளிப்பது உறுதியாகும்.

# சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பக்கச்சார்பற்ற பொதுக் கட்டமைப்பு அவசியம்

## -பில் கிளின்ரன்

(கல்முனை)

**சுனாமி நிவாரணப் பணிகளை சீராக மேற்கொள்ள பக்கச் சார்பற்ற பொதுக்கட்டமைப்பு அவசியமாகும். இதன் மூலமே புனரமைப்புப் பணிகளில் சகல தரப்பினரும் பங்குபற்ற முடியும என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும் ஐ.நா வின் விசேட பிரதி நிதியுமான பில் கிளின்ரன் தெரிவிததுள்ளார்.**





கொழும்பை வந்தடைந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் ஐ.நாவின் சுனாமி நிவாரணப் பணிகளுக்கான சிறப்புத்தூதுவருமான பில்கிளின்ரன் நேற்று முன் தினம் கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டார்.

கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி மைதானத்தை இலங்கை விமானப்படை உலங்கு வானூர்தி மூலம் வந்தடைந்த பில்கிளின்ரன், கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டர் அமைப் புக்களின் பிரதிநிதிகள் சுனாமி நிவாரணப் பணிகளுடன் தொடர்புடைய சிவில் அதிகாரிகள், ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் சர்வமதப் பிரமுகர்களுடனான சந்திப்பொன்றிலும் கலந்து கொண்டார்.

இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுனாமி நிவாரணப்பணிகள் மற்றும் மீள் கட்டுமானப்பணிகள் தொடர்பாக அவர் இச்சந்திப்பில் கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில்ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பின் பின்பு செய்தியாளர் மத்தியில் கருத்து வெளியிட்ட பில்கிளின்ரன், உத்தேச பொதுக் கட்டமைப்புக்கு தனது ஆதரவினைப் வெளிப்படுத்தியதோடு தான் மீண்டும் பல தடவைகள் இங்கு வருவேன் என்பதனை மனதில் கொள்ளுமாறும் குறிப்பிட்டார்.

மேலும், எல்லா இடங்களுக்கும் போக வேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் சென்று பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

தற்காலிக இருப்பிடங்களிலுள்ள அனைத்து மக்களையும் அங்கிருந்து வெளியே கொண்டு வரவேண்டும் என்று அனைவரும் கூறுகின்றார்கள். இப்போது இது தான் இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும். இதற்கான நடவடிக்கைகளை நாங்கள் ஆரம்பித்துவிட்டோம்.

கரையிலிருந்து எவ்வளவு தூரத்தில் நீங்கள் வீடுகளைக் கட்டமுடியும் என்ற விடயம் தொடர்பில் நாங்கள் ஒரு தீர்வினைக்கண்டாக வேண்டும். அதற்குப் பொதுக்கட்டமைப்பு என்பது முக்கியமான விடயமாகும்.

இலங்கை ஜனாதிபதியும் அதற்குத் தான் தயார் என்ற துணிச்சலான முடிவில் இருக்கின்றார். தான் அதனைச் செய்தே ஆவேன் என்றும் அவர் கூறுகின்றார்.

சுனாமி நிவாரணப்பணிகளை சீராக மேற்கொள்ள பக்கச்சார்பற்ற கட்டமைப்பு தேவை. இதன் மூலமே புனரமைப்புப் பணிகளில் சகல தரப்பினரும் பங்குபற்ற முடியும் என்றும் அவர் சுட் டிககாட்டினார்.

தனது அடுத்த விஜயத்தின் போது விடுதலைப்புலிகளின கட்டுப்பாட்டுப்பகுதி உட்பட சுனாமியினால் பாதிக்கப்பட்ட அனைத்துப்பிரதேசங்களுக்கும் தான் விஜயம் மேற்கொள்ள உத்தேசித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மீள கட்டுமானப் பணிகளுக்கு அமெரிக்க மக்களினதும் உலக அமைப்புக்களினதும் உதவிகளை தனது செல்வாக்கு மூலம் பெற்றுத்தரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கிளின்ரனின் வருகையையொட்டி நேற்று முன் தினம் பிற்பகல் முதல் அவரது விஜயம் முடியும் வரை கலமுனைப்பிரதேசத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செயயப் பட்டிருந்தன. (ற-4)

# பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதில் குழப்பம்

# ஜே.வி.பியினால் உயிருக்கு ஆபத்து சூசகமாகக் கூறுகிறார் ஜனாதிபதி

## -ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது தொடர்பாக அரசாங்கத்தின் பல்வேறு தரபபினருக்குள் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவா ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்தன் ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொருவர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தும் அளவுக்கு இந்த சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

மொனராகலை மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தபோது அங்கு இடம்பெற்ற மக்கள்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்தியாகம் செய்தாவது பொதுக் கட்டமைப்பிற்கான உடன்படிக்கையை கைச்சாத்திடுவதாக ஜனாதிபதி கூறுகின்றார். அவர் ஏன் இவ்வாறு கூறுகின்றீர்?



பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது தொடர்பாக கூறினால் அவருக்குக் கொலை அச்சுறுத்தல் வருகின்றது. அதனால் தான் ஜனாதிபதி இவ்வாறு கூறுகின்றார்.

யாரிடமிருந்து அவருக்கு அச்சுறுத்தல் வருகின்றது? விடுதலைப புலிகளிமிருந்து இந்த அச்சுறுத்தல் வரமுடியாது.

இதேவேளை, தனது கணவரை ஜே.வி.பியே கொன்றதாக கூறுகின்றார் ஜனாதிபதி. அதனையடுத்து தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவேன் என அவர் கூறுகின்றார் .

இதன மூலம் ஜே.வி.பி யினாலேயே அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படப்போகின்றது என ஜனாதிபதி கூறாமல் கூறுகின்றார் என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ற-8)

# மீண்டும் போராட்டத்தில் ஈடுபட பெ.கூ.தாபன ஊழியர்கள் முடிவு

(கொழும்பு)

திறைசேரி வசமிருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்காது விடின் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தொழிற் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

திறைசேரி வசமிருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றிலொரு பங்கினை மீண்டும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமே கையளிக்காது விடின் தாங்கள் தீர்மானிக்கும் நேரத்திலிருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கூட்டுத் தொழிற்சங்க ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இன்று திங்கட்கிழமை கூடி வேலை நிறுத்தப் போராட்டத்திற்குச் செல்லும் திகதியை ஒன்றியம் தீர்மானிக்கவுள்ளது. தங்களின் முடிவு குறித்து தொழிற்சங்கங்களின ஒன்றியம் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

எனினும் திறைசேரி வசமிருக்கும் பங்குகளை சுவீகரிக்கும் அதிகாரம் நிதியமைச்சிடமே இருப்பதாக மின்சக்தி அமைசசர் தொழிற சங்கங்களுக்கு அறிவித்துள்ளார். (ச)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**தியானம் , பற்றற்ற நிலையிலிருக்கும் தன்மை ஆகியவற்றை நாம் விடாமல் தொடர்ந்து பழகி வருவோமானால் காலப்போக்கில் நமது மனமும் நமது கட்டுப்பாட்டின் கீழ் தானகவே வந்துவிடும். நாம் தினந்தோறும் குறிப்பிட்ட நேரங்களில் தவறாமல் தியானம் செய்யப் பழக வேண்டும்.**

**சுவாமி விவேகானந்தர்**

# பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

## மல்வத்த மகா நாயக்கர் கேள்வி

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீளமைப்புக்கு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்த அரசின் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்கவேண்டுமென மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவே சுமங்கலதேரர் வலியுறுத்தியுள்ளார்.

ஜாதிக ஹெலஉறுமயவின் உறுப்பினர்களுடன் அவர் ஆலோசனை நடாத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருமலையில் புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ளமை குறித்து ஹெலஉறுமய, மகாநாயக்கருக்கு விளக்கியுள்ளது.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோர் தம்மைச் சந்தித்தனர் என்றும், பொதுக கட்டமைப்பை ஆதரிப்பது குறித்து எவ்வித உறுதிமொழியும் அவர்களுக்குத் தான் வழங்கவில்லை என்றும் ஹெல உறுமய குழுவிடம் மகாநாயக்க தேரர் கூறியுள்ளார்.

மதமாற்றத் தடைச் சட்டத்தின் அவசியம் குறித்து தான் இப்போது உணருவதாகவும், பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (ச)

### அரசியல்துறைப்...

துறைப் பொறுப்பாளருடன் சோ. தங்கன், சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன், இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். யுனிசெப் பிரதிநிதி ரெட்சைபனுடன் யுனிசெப்பின் வன்னி வதிவிடப் பிரதிநிதியும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் மாற்றலாகிச் செல்லும் யுனிசெப் பிரதிநிதி ரெட் சைபனுக்கு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் நினைவுப் பரிசில் வழங்கிச்சிறப்பித்தார்.(ச)





புங்குடுதீவு 01-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி உதயகுமார் மஞ்சுளா தம்பதிகளின் **செல்வப் புதல்வன் புவிசாஷ் தனது 1ஆவது பிறந்த நாளை** தனது இல்லத்தில் 30.05.2005 இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளார்.

இவரை அன்பு அப்பா உதயகுமார், அம்மா மஞ்சுளா, அப்பப்பா கோபாலசாமி, அப்பம்மா சரோஜினிதேவி, அம்மப்பா வசந்தகுமார், அம்மம்மா சந்திரமதி, மாமன்மார்களான கஜேந்திரன், சுகிர்தன், கஜதரன், பெரியப்பா வாசுதன், பெரியம்மா யசிந்தா, அண்ணன்மார், சித்திமார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நயினை நாகபூசணி அம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

1-ம் வட்டாரம்,
பெருங்காடு,
புங்குடுதீவு.

திரு.திருமதி தி.கோபாலசாமி
(சின்னக்குரு) (பேரன்)

(சி-1413)



யாழ் மாவட்டத்தில் முதன்முறையாக
**City& Guilds International London (U.K)** நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற

- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering
- Constructuion Industry

ஆகிய துறையில் Charted Engineer
வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
G.C.E.(O/L) அல்லது G.C.E.(A/L) படித்த
இருபாலரும் அனுமதிக்கப்படுவர்.
வகுப்புக்கள் யாவும் கொழும்பிலுள்ள
**apps** நிறுவனத்தினால் நடத்தப்படும்.

**வகுப்புக்கள் ஆரம்பம் 05.06.2005**

வகுப்பில் சேரவிரும்புவோர்கள்
01.06.2005 முன் விண்ணப்பிக்கவும்

மேலதிக விவரங்களுக்கு
**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்
T.P: 021-222 3335, 077 3151200

(C-1414)


# ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து ஜே.வி.பியை வேறுபடுத்துகின்றார் அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா கையெழுத்திட்டால் அரசுக்கான ஆதரவை ஜாதிக ஹெலஉறுமய விலக்கிக் கொள்ளுமென அதன் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் அறிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதில் ஜே.வி.பிக்கும் எமக்கும் ஒற்றுமையிருக்கலாம். ஆனால் இரு அமைப்புக்களுக்கு இடையில் அனைத்துப் பிரச்சினைகளிலும் பாரிய வேறுபாடு உண்டு.

1982 ஆம் ஆண்டு ஜே.வி.பியினர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தனர். ஆனால் தற்போது நிலைமை வேறு. அவர்களது கொள்கைகள் காலத்துக்காலம் மாறக்கூடியவை. இந்நாட்டில் இனப்பிரச்சினை இருப்பதை ஜே.வி.பி ஒப்புக்கொள்கிறது. ஆனால் நாங்கள் அதை நிராகரிக்கிறோம். தமிழர்களின் தாயகப் பகுதி வடக்குக் கிழக்கு என்பதை ஜே.வி.பி எதிர்க்கவில்லை.

ஆனால் வடக்கும் கிழக்கும் சிங்களவர்களின் தாயகப் பிரதேசம் என்பது எங்கள் நிலைப்பாடென சண்டேலீடருக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஓரேநாடு, ஒரேதேசியம் என்பதே எமது கொள்கை.

இலங்கை சிங்களவர்களுக்கானது. இங்கே வாழும் மத,இன சிறுபான்மையினருக்கான உரிமைகள் பாதுகாக்கப்படும். பொதுக் கட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி வெளியேறுவது குறித்து எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது.

எவ்வாறாயினும் பொதுக்கட்டமைப்பை சந்திரிகா மேற்கொண்டால் கடுமையான முடிவுகளை நாம் மேற்கொள்வோம். அரசை முழுவீச்சில் எதிர்ப்போம், அரசை ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம் என்றார். (ச)

## பொதுக் கட்டமைப்பு குறித்து...

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளவதற்காக உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைபை ஏற்றுக்கொளவதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

அது குறித்து அயல்நாடான இந்திய அரசிற்கு விளக்கவுள்ளதுடன், இந்திய அரசின் ஆதரவையும் பெறுவதற்காகவே ஜனாதிபதி எதிர்வரும் வியாழக்கிழமை இந்தியா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒருநாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இந்தியா செல்லும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் நோர்வேயூடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவித்து அதில் கைச்சாத்திடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு முன்னதாக ஜே.வி.பியுடன் மீண்டும் பேசுவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி மிக கடுமையாக தற்போது எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்க விபரங்களை ஜனாதிபதி வெளியிட்ட பின்னர் அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பயணம் மேற்கொள்வதற்காக சி.என்.என் நிகழ்வுகளில் பங்கேற்க திட்டமிட்டிருந்த பயணத்தை ஜனாதிபதி ரத்துச் செய்துள்ளதாகவும், அந்நிகழ்வில் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பங்கேற்பார் என்றும், செய்மதியூடாக எதிர்வரும் புதன்கிழமையன்று ஜனாதிபதி அந்நிகழ்வில் முக்கிய உரையாற்றுவார் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, தற்பொழுது அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடு திரும்பியதும் எதிர்வரும் 9 ஆம் திகதி இலங்கை வரவுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கை சந்தித்து இலங்கை இந்திய நட்புறவு குறித்து கலந்துரையாடவுள்ளார். (ச)

### விடுதலைப்புலி...

படவேண்டாம் என்றும், அனைத்து ஊடகவியலாளர்களும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் வேண்டுகோள்விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

### ஜே.வி.பியின்...

வாக்கும் ஜனாதிபதியின் செயற்திட்டங்களை ஜே.வி.பி.ஆதரிக்க வேண்டும் பொதுக்கட்டமைப்புக்காக ஜே.வி.பி. அரசில் இருந்து வெளியேறாது என நம்புகிறேன் என்றார் அவர். (ச-8)

### அமெரிக்க ...

லீசாவை சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. முன்னர், அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷ்ஷின் பிரத்தியேக ஆலோசகராக பயங்கரவாதம் தொடர்பான விவகாரங்களுக்கு பொறுப்பாக இருந்த றைஸ்தொடர்ந்தும் உலகபயங்கரவாதம் தொடர்பான அமெரிக்காவின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் முக்கிய பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இந்நிலையில் அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெற்றுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பையும் இணைத்துக் கொண்டு ஆழிப்பேரலைக்கான பொதுக்கட்டமைப்பை அமைக்கலாம் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில்கிளிண்டன் குறிப்பிட்டுள்ளமை தொடர்பாக விளக்கம் கொடுக்கவே கதிர்காமர் இந்த அவசர சந்திப்பைக் கோரியுள்ளார் என்று தெரியவருகிறது.


**மலயாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்மநாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்ததிகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்து கொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
இரவு 8.30 வரை

(9579)



**அன்பு வாசகர்களே!**

நயினாதீவு நாகபூசணிஅம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில் இம்முறையும்

**'நயினைநாகபூசணிஅம்மன்பாமாலை'**

வெளிவரும் நயினை அம்மனைத் துதிசெய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி,
'நயினை நாகபூசணிஅம்மன் பாமாலை'
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


### கைக்குண்டு...

அடையாளம் காணப்பட்டுள்ளார். சீனிமுகமது பஸ்லீம் (வயது 23), பதுர்தீன்காதர் (வயது 22) மற்றும் உசேன்சலீம் (வயது 16) ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர் இடையில் ஏற்பட்ட பிரச்சினையே இக்கைக்குண்டுவெடிப்பிற்கு காரணம் என கூறப்படுகிறது. கொல்லப்பட்டநபர் இரண்டு நண்பர்களுடன் தனது சகோதரருக்கு எச்சரிக்கை விடுப்பதற்காக கைக்குண்டை கொண்டு சென்றதாகவும் அது தவறுதலாக வெடித்தால் இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### ஹண்டர்-...

தெரிவித்தன.

குறிப்பிட்ட வானில் 13பேர் பயணம் செய்ததாக தெரிவிக்கப்பட்டது இவ் விபத்துச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

### மின்னல்...

3 இல் கல்வி பயிலும் சிறிஸ்கந்தராஜா தனுசன் (வயது 8) என்ற சிறுவனே பலியாகியுள்ளார். சிறுவனின் உடல் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை சிறுவனின் வீட்டில் நின்ற மூன்று பனைமரங்கள் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி எரிந்துள்ளன. (ச-51,8)


**மனோகரா** யாழ்




கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

**நாதன்ஸ் சினிமா**

**அறிந்தும் அறியாமலும்**

கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

**நிரோஜனாஸ்** சங்கானை
விஜயகாந்த், மீனா நடித்த




கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.